Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை (13.05.2014) பக்கங்கள் 20 ஓசை - 224

## குருநகர் யுவதியின் மரணம்; வழக்கு யூன் மாதம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் பெரிய கோயிலுக்கு பின்புறத்தில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட ஜெரோம் கொன்சலிற்றா என்ற யுவதியின் வழக்கு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பி. சிவகுமார் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை சாட்சியப் பதிவுகளை மேற்கொண்ட நீதவான் வழக்கை எதிர்வரும் யூன் மாதம் ஆறாம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

அத்துடன் கொன்சலிற்றாவின் சாவுடன் சந்தேகிக்கப்பட்ட பாதிரிமார் இருவரும் மன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தனர்.

இதேவேளை கொன்சலிற்றா மறை ஆசிரியர் என்பதைத்தவிர வேறு எந்தத் தொடர்பும் தனக்கு இல்லை என கொன்சலிற்றாவின் மரணத்துடன் தொடர்பு என சந்தேகிக்கப்படும் பெரிய கோயில் பாதிரியாரான குயின்ஸ்ரன் பெர்னாண்டோ மன்றில் சாட்சியமளித்தார்.

அவர் மேலும் சாட்சியமளிக்


(19) பக்கம் பார்க்க...

## மனித நேயத்தை மேம்படுத்த அனைவரும் அணி திரள வேண்டும்

### வெசாக் வாழ்த்துச் செய்தியில் ஐ.நா.செயலர்

மனித நேயத்தை மேம்படுத்துவதற்கு அனைவரும் அணி திரள வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்



பிட்டுள்ளார்.

பொதுவான நலனுக்காக

(19) பக்கம் பார்க்க...

# இணக்கப்பாடின்றி நிறைவடைந்த இலங்கை - இந்திய மீனவர் பேச்சு



(கொழும்பு)

இந்திய மீனவர்களின் விடாப்பிடியான கோரிக்கையை அடுத்து கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற இலங்கை - இந்திய மீனவ பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை எவ்வித இணக்கப்பாடுமின்றி நிறைவடைந்தது.

இந்திய-இலங்கை மீனவர்களின் முதற் கட்டப் பேச்சு கடந்த் ஜனவரி 27 ஆம் திகதி சென்னையில் நடத்தப்பட்டது. இதன் போது எல்லைதாண்டிச் செல்லும் வழிமுறைகள், சிறை பிடிக்கப்படும் மீனவர்களை உடனுக்குடன் பேச்சுவார்த்தை நடத்தி விடுவிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இதனையடுத்து இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஏப்ரல் 13 இல் கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. எனினும் அந்தப் பேச்சு தமிழக முதல்வரின் ஒத்துழைப்பின்மையால் ஒத்தி வைக்கப்பட்டு நேற்றைய தினம் கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

இதன்படி நேற்றைய பேச்சுவார்த்தையில் பங்கேற்க இந்திய மீனவர் தரப்பிலிருந்து தஞ்சை மாவட்ட விசைப் படகு மீனவர் சங்கத் தலைவர் ராஜமாணிக்கம், நாகை அக்கரைப்பேட்டை மீனவர் வீரமுத்து

(19) பக்கம் பார்க்க...

## இந்தியா அழைப்பு விடுத்ததா? முற்றாக மறுக்கிறார் முதல்வர்

இந்தியாவுக்கு வருமாறு தனக்கு எந்தவிதமான அழைப்பும் இந்திய வெளிவிவகார அமைச்சின் இலங்கை விடயங்களைக் கையாளும் மூத்த அதிகாரியான திருமதி சுஜித்திரா துரைசுவாமிநாதனிடமிருந்து கிடைக்கவில்லையென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு வருமாறு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் குறித்தே அவர் இவ்வாறு கூறியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு

(19) பக்கம் பார்க்க...

### ஆணைக்குழு பரிந்துரை அமுல்

## ஜனாதிபதியின் செயலருடன் பகிரங்க விவாதத்திற்கு தயார்

### என்கிறார் சுமந்திரன்

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் சிறிதளவேனும் அமுல்படுத்தவில்லை என்றும், இது தொடர்பாக, ஜனாதிபதி யின் செயலாளருடன் பகிரங்க விவாதத்திற்கு தான் தயார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். சர்வதேச விசாரணையினைத் தவிர அனைத்துப் பரிந்துரைகளையும் நிறைவேற்றத் தயார் என்ற ஜனாதிபதியின் கருத்து தொடர்பாக, கருத்துத் தெரிவித்த அவர்,

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களில் சர்வதேச விசாரணையைத் தவிர்த்து ஏனைய பரிந்துரைகளை நிறைவேற்றத் தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சர்வதேச விசாரணைகளைத் தவிர மிக

(19) பக்கம் பார்க்க...

## கட்டுத்துவக்கு வெடித்து இராணுவ வீரர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பன்றிக்கு வைத்த கட்டுத்துவக்கு வெடித்ததில் இராணுவ வீரரொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சுண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில்

(19) பக்கம் பார்க்க...

## பாப்பரசர் பிரான்சிஸ் ஜனவரியில் இலங்கைக்கு

### மடுவிற்கும் செல்வார்

பாப்பரசர் போப் பிரான்சிஸ் எதிர்வரும் வருடம் ஜனவரி 13 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள் ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் வத்திகானுக்கான விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை ஆயர்கள் குழு இது தொடர்பில் பாப்பரசர் பிரான்சிஸ்சுடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து இறுதித் தீர்மானம் எட்டப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் மன்னார் மடு தேவாலயத்திற்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன் அரசியல் தலைவர்களையும் சந்திக்க திட்டமிட்

(19) பக்கம் பார்க்க...

உள்ளே
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்களுக்கான வினாத்தாள்

## சட்ட உதவிகள் பரிமாற்றம் இலங்கை - சீனா உடன்பாடு



(பெய்ஜிங்)

குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பரம் சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், இலங்கையுடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நடந்த இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது, இந்த உடன்பாடு இறுதி செய்யப்பட்டதாக, சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நட்புரீதியான கலந்துரையாடல்களின் மூலம், உடன்பாட்டின் எல்லா விதிமுறைகள் குறித்தும் இருதரப்பும் இணக்கப்பாட்டுக்குள் வந்துள்ளதாக சீன வெளி விவிகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் முடிவில், இருதரப்புக் குழுக்களினதும் தலைவர்கள் பேச்சு ஆவணத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

சீனாவின் சார்பில் வெளிவிவகார அமைச்சு, உச்ச நீதிமன்

(19) பக்கம் பார்க்க...

# கழிவகற்றல் பொறிமுறை தோல்வி; கிளி. நகரில் துர்நாற்றம்

கிளிநொச்சி புகையிரத நிலைய வீதியில் உள்ள கால் வாய்களில், உணவகங்களின் கழி வுகள் விடப்படுவதால் துர்நாற்ற மும், சுகாதாரச் சீர்கேடும் நிலவி வருவதாக வர்த்தகர்கள் தெரி விக்கின்றனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட செய லகத்திற்கு முன்பாக செல்கின்ற புகையிரத நிலைய வீதியில் உள்ள ஒரு சில உணவகங்களின் கழிவுகள் வீதியின் கரையில் காணப்படுகின்ற திறந்த கால் வாய்களில் விடப்படுவதால் அந்த வீதி முழுவதும் துர்நாற்றம் வீசு வதாகவும், சுகாதாரச் சீர்கேடுகள் உருவாகும் நிலையிலும் காணப் படுவதாகக் குறிப்பிடும் வர்த்த கர்கள், இதனால் அந்த வீதியில் உள்ள ஏனைய வியாபார நிலை யங்கள் மற்றும் அலுவலகங்க ளில் பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளனர்.

தொடர்ந்தும் துர்நாற்றம் வீசி வருவதால் தங்கள் வியாபார நிலையத்தில் இருக்க முடியாத நிலை காணப்படுவதுடன், பெரு மளவான மக்கள் பயன்படுத்து கின்ற குறித்த வீதியில் செல் கின்ற மக்களும் முகத்தை சுழி த்த நிலையில் பயணிப்பதாகவும் கூறுகின்றனர்.

கரைச்சி பிரதேச சபைக்கு அருகாமையில் செல்கின்ற இந்த வீதியில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் பிரதேச சபைக்கு அறி வித்தும் இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை என்றும் குறித்த வீதியில் உள்ள வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (29)

## சுங்க உதவி அத்தியட்சகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நிதி திட்டமிடல் அமைச்சின் சுங்கத் திணைக்களத்தில் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற் கான திறந்த போட்டிப் பரீட் சைக்கு இலங்கை பிரஜைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

வயது 22- 28 இற்கு உட்பட்ட சிறந்த ஒழுக்கமுடைய உயரம் 5 அடி 5 அங்குலமும் மார்புச் சுற்றளவு 33 அங்குலமுள்ளவர் கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமையாக பல் கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற வர்களும் க.பொ.த (சா/த) பரீட் சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும், க.பொ.த (உ/த) பரீட் சையில் ஆங்கிலத்தில் சாதா ரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும் ஓய் வூதியத்திற்குட்பட்டதுமாகும். நியமனம் பெறுபவர்கள் நாட்டின் எப்பாகத்திலும் இரவிலும் பகலி லும் சேவையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சையாக உளச் சார்பு பரீட்சையும், ஆங்கில மொழிப் பரீட்சையும் நடைபெ றும். மும்மொழியிலும் நடைபெ றும் பரீட்சை யூலை மாதம் கொழும்பில் மட்டும் நடைபெறும்.

விண்ணப்பங்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங் கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் த.பெ. இல. 1503, கொழும்பு. என்ற முக வரிக்கு பதிவுத்தபாலில் 4.06.2014 இற்கு முன்னர் அனுப்பும்போது கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடல் அவசியமாகும். பரீட் சைக் கட்டணமாக 750 ரூபா செலுத்த வேண்டும். (105)

## மின்வெட்டு

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை மற் றும் 17.05.2014 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை குடத்தனை, நடுக்குடத் தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்மன் ஆகிய இடங்களிலும், 18.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மண்கும் பான், அல்லைப்பிட்டி, மண்டை தீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## சுகாதாரத் தொழிலாளர்கள் ஒன்பது பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு ஒன்பது பதிலீட்டு சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து பெண்களும், நான்கு ஆண்களுமாகவே இவ்வாறு ஒன் பது பதிலீட்டு சுகாதாரத் தொழி லாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சினால் ஏற்க னவே யாழ். போதனா வைத் தியசாலையில் நடத்தப்பட்ட நேர் முகப் பரீட்சையின் மூலம் தெரி வாகியவர்களுக்கே இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## பொங்கல் விழா

முல்லைத்தீவு அம்பகாமம் அருள் மிகு மம்மில் பிள்ளையார் பௌணர்மி பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெறவுள் ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திர பௌணர்மி பொங்கல் விழா எதிர்வரும் 14.05.2015 புதன் கிழமை சிறப்பாக நடைபெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்ததோடு பாற்சொம்பு, காவடி போன்ற நேர்த்திக்கடன் களை மேற்கொள்ளலாம் என ஆலய பிரதம பூசகர் நாதன் தெரிவித்துள்ளார். (40)

## தெய்வீக கவிதைத் தொகுப்பு இன்று வெளியீடு

உடுவில் மீனாட்சி அம்மன் மீது இ.மோகன் எழு திய அந்தாதி வடிவிலான தெய்வீகக் கவிதைத் தொகுப்பான மீனாட்சி அந்தாதி நூல் வெளியீடு தேவஸ்தான மண்டபத்தில் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆசியுரைகளினை உடுவில் மீனாட்சி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி.முத்துச்சாமிக் குருக்கள், சிவஸ்ரீ சி.பாலசுப்பிரமணியக்குருக்கள், யாழ். சின்மயமிஷன் பிரமச்சாரி ஜக்கிராத் சைதன்ய சுவாமி கள் ஆகியோரும், வாழ்த்துரைகளினை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஓய்வு நிலை உப அதிபர் கலாபூஷ ணம் வ.சிவநேசன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

முதற்பிரதியினை கொழும்பு ரெக்னோ ரெக்கொம் நிறுவனத்தின் கணணிப் பொறியிலாளர்களும் முகா மைப்பணியாளர்களும் ஆகிய ஞ.பிரபாகரன் ஞா. குணாளன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (63)

## தடம்புரண்டது பாரவூர்தி

(முழங்காவில்)

பூநகரியில் பரந்தன் வீதியில் 66 ஆவது படைப் பிரிவின் முகாம் அருகே நெல் மூடைகளுடன் வேக மாக வந்த ஹன்ரர் வாகனம் தடம்புரண்டதில் வாகனத் தின் முன்பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் சாரதி சிறு காயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1.00 மணியள வில் இடம்பெற்றுள்ளது டன், காயமடைந்த சாரதி யின் உதவியாளர் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர் பாக மேலும் தெரியவரு தாவது,

75 நெல்மூடைகளு டன் வந்து கொண்டிரு ந்த ஹன்ரர் வாகனம் எதிராக வந்த முச்சக்கர வண்டியை விலத்திச் சென்ற வேளையிலேயே வடிகானுக்குள் தடம் புர ண்டு வாகனம் விபத்துக் குள்ளானதாக தெரிவிக் கப்படுகிறது.

இவ்விபத்தில் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (112)


## சிறுவிளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**வீதிக்குப் பெயர் மாற்றம்**

மக்களின் வேண்டுகோளிற்கிணங்க இலந்தைக்குளம் வீதியிலிருந்து கொழும்புத்துறை வீதி வரையான தற்போ தைய ஆரியர் வீதியினை விபுலானந்தர் வீதி எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளமையால் இதற்கான பொது மக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/அபிப்பிராயங்களை இன்றிலிருந்து 14 நாட் களுக்குள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கி றேன்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C/3420)

**இலங்கை வேந்தன்கலைக் கல்லூரி**
நடாத்தும்
**இயல் இசை நாடகவிழா -2014**

தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்

**13.05.2014 முதலாம் நாள்**

நேரம் : பி.ப 4.00 மணி

இடம் : இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

**பிரதம விருந்தினர்**
திரு. சீ.வி.கே.சிவஞானம்
(அவைத்தலைவர் வடமாகாணம்)

நாச்சிமார் கோவிலடி "இராஜேஸ்வரி" குழுவினர் வழங்கும்
மங்கல இசை

நாதஸ்வரம்
திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
திருமதி தையல்நாயகி சுப்பிரமணியம்

தவில்
திருமதி புஸ்பராணி திருச்செல்வம்
திருமதி செல்வநாயகி உதயகுமார்



மங்கல விளக்கேற்றல்
தேவாரம் : செல்வன் வசந்தகுமார் கஜானன்
ஆசியுரை : ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள்
(சின்மயா மிஷன் - யாழ்ப்பாணம்)
வாழ்த்துரை : புலவர் முத்து இராசரத்தினம்

சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவச் சிறுவர் இல்ல மாணவிகள்" வழங்கும்

**வரவேற்பு நடனம்**
நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரவீந்திரன்
பாட்டு : திருமதி பா.சியாமளா
மிருதங்கம் : திருமதி கே.சிவகுமார்

☆"யோகர் சுவாமி நற்சிந்தனை" இசைப்போட்டியில்
அகில இலங்கை ரீதியில் முதற் பரிசு பெற்ற

**இசையரங்கம்**
பாட்டு : செல்வி பவனுஜா தெய்வேந்திரன் கடம் : திரு. கு.ரவிசங்கர்
வயலின் : திரு.அம்பலவாணர் ஜெயராமன் முகர்சிங் : திரு. பெ.ஜெயகாந்
மிருதங்கம் : திரு. கந்தசாமி நந்தகுமார்

☆நா.மதியழகன் குழுவினர் வழங்கும்
(வில்லிசைப் புலவர் சின்னமணியின் மாணவர்கள்)
"இசையும் மனிதனும்" வில்லிசை

☆"ஏழிசை" மிருதங்க நர்த்தனாலய மாணவிகள் வழங்கும்
**நாட்டிய அர்ப்பணம்**
நட்டுவாங்கம் : திருமதி பாலினி கண்ணதாஸ்
பாட்டு : திரு தவநாதன் றொபேட்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு ஜி.கண்ணதாஸ்

- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் பூதத்தம்பி இசைநாடகம்

அனுசரணை: துவாரக நகை இல்லம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/3679)

# உள்ளக அபிவிருத்தித் திட்டத்திற்கு பிரதேசசபையால் நிதி ஒதுக்கீடு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் உள்ளக அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் தியாகேஸ்வரி அன்னலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் உள்ளக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படாமையால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்ததுடன் பிரதேச சபை கூட்டங்களிலும் அபிவிருத்தி குறித்து கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் பிரதேச சபையில் சில அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி மண்டான் பொதுச்சந்தை வேலைகளுக்கு, வல்லை மயானத்துக்கு நிதி ஒதுக்கீடும் ஜே/342 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கரணவாய் தெற்கு மக்களுக்கான குடிநீர் விநியோகத்துக்கு மாகாண அபிவிருத்தி நன்கொடைநிதியிலிருந்து 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நெல்லியடி கிழக்கு முடைக்காட்டு வீதி, கரவெட்டி வடக்கு சரஸ்வதி வித்தியாலய வீதி, துண்ணாலை மேற்கு வீதி, துன்னாலை ஆட்டுப்பட்டி வீதி ஆகிய வீதிகள் புனரமைப்பிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்தி வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (18)

## கலைமாலை நிகழ்வு இன்று

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் லண்டன் மாணவர் சங்கத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் "கலைமாலை" நிகழ்வு பி.ப 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கல்லூரி மாணவர்கள் அனைவரும் சந்திக்கும் ஒன்று கூடலாகும். அதுமட்டுமன்றி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் களமாகவும் அமைகின்றது.

எனவே அனைத்து மாணவர்களும் தங்களது குடும்ப சகிதம் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது. (எஸ்.பி)

## சமூகசேவைகள் அமைச்சின் விழிப்புணர்வு கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அனுசரணையில் சமூக சேவைகள் அமைச்சினால் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்டச் செயலகதிட்டப் பணிப்பாளர் ச.மோகனபவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், அமைச்சின் உளவளஆலோசகர் எம்.எச்.எம்.அஸ்கர் கிளிநொச்சி மாவட்ட செயலக உளவள அலுவலர் தே.துஸ்யந்தன் மற்றும் மாவட்டத்திலுள்ள 4 பிரதேசசெயலக பிரிவிலுள்ள வெளிக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (90)



அன்னையர் தின நன்னாளான நேற்றுமுன்தினம் குடும்பத்தலைவரின் இருகண்களும் பார்வையிழந்து, வாழ்வாதாரத்துக்கு தொழில் கூட மேற்கொள்ளமுடியாத 3 பிள்ளைகளைக் கொண்ட காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தனது உதவிக்கரங்களை நீட்டியபோது. (48)

## சுங்கப் பரிசோதகர் தரம் II பதவிக்கான போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நிதி திட்டமிடல் அமைச்சின் சுங்கத் திணைக்களத்தில் சுங்கப்பரிசோதக்ர் தரம் II ஆம் பதவிக்கான திறந்த போட்டிப்பரீட்சை எதிர்வரும் ஜீலை மாதம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி உட்பட ஏனைய எட்டு மாகாணங்களிலும் பரீட்சை இடம்பெறும்.

விண்ணப்பதாரி 18 - 24 வயதிற்குட்பட்டவராகவும் இலங்கைப்பிரஜையாகவும் சிறந்த நல்லொழுக்கமுடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல், உளநலமுடைவராகவும் உயரம் 5 அடி 5 அங்குலம், மார்பு சுற்றளவு 33 அங்குலமுள்ளவராகவும் இருத்தல் அவசியமாகும்.

கல்வித்தகைமையாக க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

எழுத்துப்பரீட்சையாக உளச்சார்புப்பரீட்சை கணிதம், ஆங்கிலமொழி பரீட்சைகள் என்பன இடம் பெறும்.

விண்ணப்பங்கள் ஜீன்மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப்பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிட வேண்டும். கடிதஉறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் அவசியமாகும். பரீட்சைக்கட்டணமாக 500 ரூபா செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(105)

## சுருட்டில ஏமாத்தினவர் பரதேசியானார்... சுத்துப்பட்டவர் ஆட்சியில் உள்ளார்... ஆர் கொலோ, சதுரர்?




இலங்கையில மற்ற இனத்தவர்களை விடத் தாங்கள்தான் கெட்டிக்காரர்கள் எண்டு தமிழர்கள் ஒரு காலத்தில் புளுகிக்கொண்டிருந்தினம்.

தரமான புகையிலைக்கும் தரமில்லாத புகையிலைக்குமிடையில இருக்கிற வேறுபாட்டைக்கூட இனங்காண முடியாத அளவுக்கு பெரும்பாலான சிங்களவர்கள் இருக்கிறார்கள் எண்டு ஊரில எங்கட ஆட்கள் கதைப்பினம்.

அந்த நாளையில சிங்களப்பகுதிகளில அநேகமாகத் தமிழாக்கள்தான் கடை வைச்சிருந்தவை. இந்தக் கடைகளுக்குச் சிங்கள ஆட்கள் வந்து **'கோடாப்போட்ட சுருட்டு'** எண்டோ **'பாணிப்போயிலை'** எண்டோ கேட்டால், இவை (தமிழாக்கள்) மெல்லத் தலையைக் குனிஞ்சு சாதாரண சுருட்டைத் தங்கட வாய்க்குள் வைத்து எச்சிலில் நனைத்துப்போட்டுக் குடுப்பினமாம்.

இதை அப்பாவித்தனமாக நம்புகிற சிங்கள ஆட்கள் உண்மையான கோடாப்போட்ட சுருட்டுத்தான் எண்டு வாங்கிக்கொண்டு போவினமாம்.

இப்பிடிப் பல கதைகளை – தங்கட கெட்டித்தனங்களைச் சொல்லிப் பெருமைப்படுவினம் தமிழாக்கள்.

இப்பிடியெல்லாம் உண்மையில நடந்திதோ இல்லையோ... தெரியாது. அப்பிடி உண்மையாக நடந்திருந்தால், இது கெட்டித்தனமில்லை. படு அயோக்கியத்தனம் என்பேன்.

அதைவிட இப்பிடியான ஒரு எண்ணம் – தாங்கள்தான் மற்றவர்களை விடக் கெட்டிக்காரர் எண்ட 'கெப்பர்' தமிழாக்களுக்கு இருந்திருக்கு.

இந்த எண்ணமே பிழையான ஒண்டல்லவா! தங்களுடைய நியாயமான திறமையினால் ஒருவர் உயர்வது வேறு. இப்பிடியான ஏமாற்றுகளால் மற்றவர்களை ஏய்த்து உயர்வது வேறு.

அதைப்போல வியாபாரத்தில் தந்திரம் இருக்கலாம். ஆனால், இப்பிடியான 'கிலிசைகேடு' இருக்கிறது அழகில்லை.

தமிழர்கள் இப்பிடியெல்லாம் சிந்திக்கிறார்கள். இப்பிடியெல்லாம் தங்களை ஏமாத்துகிறார்கள் எண்டு தெரிஞ்ச சிங்களவர்கள் தமிழாக்களைத் தாக்கத் துடங்கினார்கள்.

இப்ப சிங்களப்பகுதிகளில தமிழாக்களுக்குக் கடையுமில்லைத் தொழிலும் இல்லை.

சாதாரண சுருட்டையே **'கோடாப்போட்ட சுருட்டு'** என்று எச்சிலைத் தடவி விற்றுக் காசாக்கிய தமிழாக்களால் – தமிழாக்களின்ரை கெட்டித் தனத்தினால், சிங்களவர்களிட்டயிருந்து தமிழருக்கான அரசியல் உரிமையையும் அதிகாரத்தையும் பெற முடியாமல் போயிட்டுது.

அறுபது எழுபது வருசமாக தமிழர்கள் என்னவெல்லாமோ செய்தார்கள். ஆண்ட பரம்பரை எண்டார்கள். அடித்துப் பிடிப்போம் எண்டார்கள். சொந்த நிலத்தை மீட்போம் எண்டார்கள். அரசாங்கத்தைக் கவிழ்ப்போம் எண்டார்கள். அரசாங்கத்துக்குப் பாடம் படிப்பிப்போம் எண்டார்கள். இந்தியாவைக் கொண்டு வந்து விளையாட்டுக்காட்டுவோம் எண்டார்கள். இப்பிடிச் சொல்லிச் சொல்லியே தங்களைத் தாங்களே தோற்கடித்தார்கள்.

இப்பவும் இப்பிடித்தான் புலம்பிக்கொண்டிருக்கினம்.

இந்தா பார் அமெரிக்கா வருது. அரசாங்கத்தை அது மடக்கப்போகுது.

அந்தா பார், ஐ.நா வருது. அரசாங்கத்தின்ரை கழுத்தில சுருக்குக் கயிற்றை மாட்டப்போகுது.

இந்த மாதிரிக் கதை விட்டுக்கொண்டே தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டே இருக்கிற அளவுக்குத்தான் இண்டைக்குத் தமிழ்ப்பெருங்குடி வந்திருக்கு...

என்னதான் செய்வது இதையெல்லாம்... ஐயகோ...

சிங்களவர்களை விடத் தாங்கள்தான் பென்னாம் பெரிய விண்ணாதி விண்ணர்கள் எண்டு பறைசாற்றிய தமிழர்கள் ஏன் இப்பிடிச் சந்தி சிரிக்கத் தெருவில நிக்கிறார்கள்?

ஆண்ட பரம்பரை ஏனிப்பிடி இண்டைக்கு அறிவு குறைஞ்ச சிறுகுடிவினைப்போல சிதைஞ்சு பரதேசம் போகுது?

சொந்த நிலத்துக்காகப் போராடப் புறப்பட்ட இனம் இண்டைக்கு அந்தச் சொந்த நிலத்தை விட்டே ஓடிக்கொண்டிருக்குது...

இன்னும் ஓடுகிற எண்ணத்தோடதானே இருக்கு..

அப்பிடியெண்டால்... உண்மையில இந்தத் தமிழினத்தின்ரை எதிர்காலம் தான் என்ன?

இப்பிடியே தாங்கள்தான் பெரிய ஆக்கள்... எங்களுக்குத்தான் இந்த உலகத்தில பெரிய செல்வாக்கிருக்கு.. நாங்கள் சொல்லிறதைத்தான் உலகம் நம்புது...

இப்பிடியே எங்கட முதுகில நாங்களே தட்டிக்கொண்டு... எங்கட கழுத்தில சுருக்குக்கயிற்றை மாட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதானா...

இப்ப சொல்லுங்கோ...

இவ்வளவுக்குப் பிறகும் – இவ்வளவு காலத்துக்குப் பிறகும் தமிழர்கள் தங்கட பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் கண்டவன் நிண்டவன்ரை காலில எல்லாம் விழுந்து கும்பிட்டுக்கொண்டிருக்கினம் எண்டால்... தமிழாக்கள் கெட்டிக்காரரா...

தமிழாக்களை ஆட்டிப்படைச்சுக் கொண்டிருக்கிற சிங்கள ஆட்கள் கெட்டிக்காரரா?....

உன் நல்ல செயல்களின் மூலம் பிறருக்கு வழி காட்டியாக இரு.

- இங்கர்சால்

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## விடாப்பிடியும், தீட்டு மனோபாவமும் ஏன்?

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வருமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு மீண்டும் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெரிவுக்குழு மூலம் தமிழ்மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கம் நியாயமாக நடக்கத் தவறினால், தான் தொடர்ந்தும் அரசில் இருப்பது குறித்து மறுபரிசீலனை செய்வேன் என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமைச்சரின் இந்த அழைப்பை எவ்விதம் எடுத்துக்கொள்ளும் என்பது தமிழ் மக்கள் யாவருக்கும் சொல்லாமலே விளங்கும். அரசின் அழைப்பையே ஏற்காத எங்களிடம் அரசின் அங்கமாக இருப்பவர் அழைப்பு விடுப்பதா?

எதிரி அரசாங்கத்தின் எந்தவொரு நபரின் கருத்தையும் பொருட்படுத்தச் சொல்லி எமது மக்கள் எங்களிடம் கேட்கமாட்டார்கள். தமிழ் மக்களுக்கு இந்த அரசில் எள்ளளவும் நம்பிக்கையில்லை. இத்தகைய எதிரி ஏமாற்றுக்களை நம்பி "போகாதே போகாதே என் கணவா" என்றுதான் அழுதழுது அவர்கள் எங்களைத் தடுப்பார்கள்...

இந்தமாதிரி அரசாங்கத்தோடு பேசித் தீர்வுகாணலாம் என்று சொல்லும் சவால்களுக்கெல்லாம் ரோசத்தமிழன் பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமா? என்று அலட்சியமான மௌனத்தாலேயே தன்னேரில்லாத் தமிழ்ப் பெருங்குடியின் பெருமையைப் புரியவைப்பார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மகா ஊடகங்களும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுத்து, அரசின் மீதான பகையை தமிழ்மக்கள் ஒருபோதும் மறந்துவிட மாட்டார்கள் என்று காட்ட வேண்டிய இந்த நேரத்தில் தீர்வு, தெரிவுக்குழு என்று பேசுவதா? என்னவொரு தமிழ்த் துரோகம் இது? என்று கொந்தளித்து மக்களைக் கொப்புகளில் ஏற்றுவார்கள்.

இந்தத் தமிழ்ச் சீமான்கள், யதார்த்த நிலைமையை விளங்கியோ, தர்க்கபூர்வமாகச் சிந்தித்தோ அல்லது தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் பற்றி பொறுப்புணர்வுடன் யோசித்தோ எப்போது பேசியிருக்கிறார்கள்? தமிழ் மக்களை எதையும் நிதானமாகச் சீர்தூக்கிச் சிந்திக்க விடாமல் உணர்ச்சி அலைகளில் உருட்டிச் சுழற்றிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

அமைச்சர் டக்ளஸ் அரசாங்கத்தில் மிகமூத்த கபினற் அமைச்சர்களில் ஒருவர். ஜனாதிபதிக்கும் அரசுக்கும் முக்கியமானவர் என்பதை ஜனாதிபதியும் அரசின் ஏனைய அமைச்சர்களும் எப்போதும் உணர்த்தியே வந்திருக்கிறார்கள்–வருகிறார்கள். அவர், தெரிவுக்குழு விடயத்தில் அரசு நியாயமாக நடந்துகொள்ளத் தவறினால் அரசிலிருந்து விலகுவேன் என்பது தமிழ் மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய ஒரு ஆயுதமா இல்லையா?

தெரிவுக்குழுவுக்குப் போய் அங்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால், அரசாங்கத்தை இந்தவிதமாகவும் அம்பலப்படுத்துவதில் நமக்கு என்ன குறைவு வந்துவிடப்போகிறது? அரசில் அங்கமாக இருக்கும் தமிழ் அமைச்சரும் இவ்வாறான நெருக்கடியைக் கொடுப்பதென்பது, தீர்வு விடயத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு வலியுறுத்தியதாகாதா?

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில், இந்த நாட்டின் அனைத்துக் கட்சிகளினதும் அபிப்பிராயத்தை வெளிக்கொண்டுவரும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுக்கிறது?

தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகளும், சிங்கள முற்போக்கு சக்திகளும் ஏதோ ஒரு சமரசப்புள்ளியில் இணைவதன் மூலம் தானே இந்த நாட்டின் பிரச்சினைக்குச் சரியான தீர்வு வரமுடியும்? அப்படி ஒரு விசயம் இங்கு நடந்துவிடக் கூடாது என்பதில் கூட்டமைப்பினருக்கு ஏன் இவ்வளவு விடாப்பிடியும், தீட்டு மனோபாவமும்?

- ஆசிரியர்

# இலங்கையின் உண்மை நிலையை உலக நாடுகளுக்கு தெளிவுபடுத்துங்கள்

### வெளிநாட்டு தூதுவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

இலங்கையின் பல பாகங்களுக்கு விஜயம் செய்து, இங்குள்ள உண்மையான நிலைமைகளை உங்களின் நாடுகளுக்கு தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புதிய வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கான கொங்கோ தூதுவர் பிலிக்ஸ் நகோமா (வாசஸ்தலம் புதுடில்லி), ஆர்ஜன்டீன தூதுவர் ராகுல் இக்னாசியோ குவாஸ்டாவினோ (வாசஸ்தலம்-புதுடில்லி) தென் கொரியத் தூதுவர் சாங் வேங் சாம், (வாசஸ்தலம்-பிலிப்பைன்ஸ்) தூதுவர் வின்சேன்டி விவியன் சியோடி பண்டில்லோ (வாசஸ்தலம் டாக்கா), பாலஸ்தீன தூதுவர் சுஹைர் அஹமடல்லா சாஹிட், எல்-சல்வடோர் தூதுவர் கில் ஹெரிமோ ரூபியோ பன்நெஸ் (வாசஸ்தலம்-புதுடில்லி) ஆகியோர் இலங்கைக்கான தூதுவர் நியமனக் கடிதங்களை நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இலங்கைக்கான தூதுவர்கள், இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தவும் இலங்கை மக்கள் தொடர்பிலான நற்செய்திகளை தமது நாடுகளில் மதிப்புக்குரிய தலைவர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

# பட்டம் பெறுவோரின் தொழில் தகுதி அடுத்த வருடம் முதல் அதிகரிக்கப்படும்

### உயர்கல்வி அமைச்சு தகவல்

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள், தொழில் வாய்ப்புகளில் ஈடுபட 55 வீதமான தகுதியை மாத்திரமே கொண்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்த வருடத்தில் 70 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

கலைத்துறையில் பட்டம் பெற்றவர்கள் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவது 28 வீதம் என்ற குறைந்தளவான தகுதியையே பெற்றுள்ளனர்.

விஞ்ஞானத்துறையில் பட்டதாரிகள் 68 வீதத்தையும், முகாமைத்துவப் பட்டதாரிகள் 63 வீதமான தகுதியையும் கொண்டுள்ளனர்.

அத்துடன் பொறியியல்துறை பட்டதாரிகள் தொழில் வாய்ப்புகளில் ஈடுபடும் 93 வீதமான உயர்ந்த சதவீதத்தைக் கொண்டுள்ளனர். இதனைத் தவிர மருத்துவப் பட்டதாரிகள் 90 வீதமான தகுதியைக் கொண்டுள்ளனர் என்றார்.

# துப்பாக்கிச் சூட்டு சூழ்ச்சியை நாட்டுக்கு வெளிப்படுத்துவேன்

### நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

என் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை சூழ்ச்சியாகும் நாட்டுக்கு விரைவில் அதனை வெளிப்படுத்துவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

என் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட வேளையிலிருந்து, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வறிய மக்கள் விகாரைகளிலும், கோவில்களிலும, தேவாலயங்களிலும நடத்திய சமய வழிபாடுகளே நான் விரைவாகக் குணமடைவதற்கு காரணமாக இருந்தன.

அந்த வறிய மக்களின் பிரார்த்தனைகளே நான் அபூர்வமாக குணமடைவதற்கு காரணமாக அமைந்தன. நான் மீண்டும் உயிர் பிழைப்பதற்கும அதுவே காரணமாக இருந்தது. அந்த வறிய மக்களின் பிரார்த்தனைகள் காரணமாக, அந்த மக்களுக்கு மீண்டும் சேவையாற்றும் வகையில் எனது பாரிய காயம் குணமடைந்துள்ளது.

இலங்கையின் அரசியலில் தற்போதைய காலமே பொற்காலமாகும். பல ஜனாதிபதிகளுக்கு முடியாது போயிருந்த 30 வருடகால பயங்கரவாத நடவடிக்கையை முற்றாக ஒழிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மாத்திரமே முடிந்திருக்கிறது. சுதந்திரமாக சுவாசிக்கும் நாடு ஒன்றை ஜனாதிபதி எமக்குத் தந்துள்ளார். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அபிவிருத்தி இடம்பெறுகின்றன. நான் எப்பொழுதுமே மக்களுக்காக மக்களுடன் இருக்கும் ஒரு அரசியல்வாதி. நாட்டுக்காக சேவையாற்றக் கூடிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது வைத்திருந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவருடன் இணைந்தேன்.

நான் எடுத்த தீர்மானம் மிகவும் சரியான தீர்மானம் என தற்போது உறுதியாகியுள்ளது. எனது 10 வருட அரசியல் வாழ்க்கையில் ஏழு வருடங்கள் கூட்டமைப்புடன் கழிந்திருக்கிறது. நான் மூன்று தேர்தல்களில் போட்டியிட்டு அவற்றில் அதிக விருப்பு வாக்குகளை பெற்றேன். அந்தத் தேர்தல்களில் இரண்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டேன். 2009 ஆம் ஆண்டு கூட்டமைப்பு சார்பில் மாகாண சபையில் போட்டியிட்டு முதலாவது அதிக விருப்பு வாக்குகளான ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 128 விருப்பு வாக்குகளைப் பெற்றேன் அதே போன்று, 2010 ஆம் ஆண்டில் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களை மிஞ்சும் வகையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அதிகூடிய விருப்பு வாக்குகளான ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 336 வாக்குகளைப் பெற்றேன் என்றார்.

# மட்டக்களப்பு உறுகாமத்தில் விவசாயிகள், மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, உறுகாமம் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கை தடைசெய்யப்பட வேண்டும். இவர்களுக்கான நீர் வழங்கல் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரி. விவசாயிகளும் மீனவர்களும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில் செங்கலடியிலுள்ள நீர்ப்பாசன திணைக்களத்தின் உறுகாமம் பிரிவு காரியாலயத்தில் இந்த ஆர்பபாட்டம் நடைபெற்றது. உறுகாமம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வேளாண்மை செய்யும் 13 அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

உறுகாமம் குளத்திலுள்ள நீரினைக் கொண்டு 5240 ஏக்கரில் இம்முறை விவசாயம் செய்வதாக சிறுபோகச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டத்தில் 13 விவசாய அமைப்புக்கள் இணைந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் தற்போது இரண்டு நாட்கள் மழை பெய்தவுடன் எல்லோரும் வேளாண்மை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் இவர்களின் அத்துமீறிய நடவடிக்கை காரணமாக ஏற்கனவே செய்கை பண்ணப்பட்ட காணிகளுக்கு நீர் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களத்தினரும் தற்போது அத்துமீறி வேளாண்மை செய்பவர்களுக்கு நீர் வழங்குகின்றனர். இதனை உடனடியாக நிறுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட காணிகளில் வேளாண்மை செய்பவர்களுக்கு தொடர்ச்சியாக நீர் வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர்.

# இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரை நூற்றாண்டுக்கும் மேலானது...

■ சுப்பராஜன் ■

**1960களின்** முற்பகுதியில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எ.்.ப் கெனடிக்கும், அதே காலகட்டத்தில் இலங்கையின் பிரதமராக இருந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இடையில் முக்கியமான சில விடயங்கள் குறித்து தந்திப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளதாக அண்மையில் வெளியான வெள்ளை மாளிகையின் சில இரகசிய ஆவணங்களிலிருந்து தெரிய வந்திருக்கிறது.

அந்த நேரத்தில் அமெரிக்கா பசுபிக் கடல் பிராந்தியத்தில் மேற்கொண்ட அணுவாயுத சோதனை, அமெரிக்காவுக்குச் சார்பான தென் வியட்நாம் அரசாங்கம் அந்த நாட்டின் பெரும்பான்மையான பௌத்த மக்களுக்கு ஏற்படுத்திய கொடுமைகள், இலங்கையில் சிறீமாவோவின் அரசாங்கம் அந்நிய எண்ணெய் கொம்பனிகளை தேசியமயமாக்கிய விவகாரம் என்பன இந்தத் தந்திகளில் பரிமாறப்பட்ட முக்கியமான விடயங்களாகும்.

அந்த காலகட்டத்தில் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த ஆர்.டபிள்யு. கோமெர் (R.W.Komer) ஜனாதிபதி கெனடிக்கு அனுப்பி வைத்த ஒரு இரகசியக் குறிப்பில் (E.O.12959, Sec.3.5(b)) “கடந்த பெப்ரவரியில் ஹிக்கென்லூப்பர் (Hickenlooper) திருத்தத்தின் பிரகாரம் உதவிகளை நிறுத்திய பின்னர் இலங்கையுடனான உறவுகள் கூடாத நிலையிலிருந்து மோசமான நிலைக்குச் சென்றுள்ளன”” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தனது இரகசியக் குறிப்பில், ஏற்கெனவே எண்ணெய் கொம்பனிகளை சிறீமாவோ அரசு தேசியமயமாக்கியுள்ள நிலையில், தற்போதைய அமெரிக்க - இலங்கை உறவுகளின் சீர்கெட்ட நிலையை இலங்கையிலுள்ள இடதுசாரிகள் பயன்படுத்தி, சிறீமாவோ பண்டாரநாயக்கவை மேலும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டக்கூடும் எனவும் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கைகளைப் பரிசீலிக்கும்படி கெனடியைக் கேட்டுக் கொண்ட கோமெர், இந்தப் பிரச்சினையை நட்புறவுடன் அணுகித் தீர்வுகாணுமாறும் ஜனாதிபதி கெனடியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவருடைய இந்த இரகசியக் குறிப்பு 1963இல் கெனடி கொலையாளி ஒருவனால் சுடப்பட்டு இறப்பதற்கு 4 மாதங்கள் முன்னதாக அனுப்பப்பட்டதாகும். அவர் இந்தக் குறிப்பை அனுப்புவதற்கு முன்னர் அப்பொழுது அமெரிக்காவில் இலங்கையின் தூதுவராக இருந்த மெரின்ன பிரான்சிஸ் டி சில்வாவை (Merenna Francis de Silva) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அந்தச் சந்திப்புக் குறித்து தான் அனுப்பிய இரகசியக் குறிப்பில் குறிப்பிடுகையில், ““இலங்கைத் தூதுவர் தனது அரசாங்கத்தை விட மேற்குக்கு விசுவாசமாக இருக்கிறார்”” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு ஹிக்கென் லூப்பர் திருத்தம் என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு அதிகாரி ஆர்.டபிள்யு. கோமர் குறிப்பிடுவது, 1959 இல் கியூபாவில் .்.பிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் சோசலிசப் புரட்சி அரசாங்கம் அமைந்த பின்னர் அந்த நாட்டுக்கான உதவிகளை நிறுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்ட சட்டத் திருத்தமாகும். அந்தத் திருத்தம் கியூபாவை இலக்கு வைத்து கொண்டு வரப்பட்டதாயினும் இலங்கை போன்ற நாடுகளுக்கான அமெரிக்க உதவியையும் அது பாதித்தது.

அத்துடன் வியட்நாமை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சுப் படைகள் வியட்நாம் சுதந்திரப் போராளிகளால் தோற்கடிக்கப்பட்டு, அவை அந்த நாட்டை விட்டு வெளியேறிய பின்னர், அமெரிக்கா அங்கு கால் ஊன்றியதுடன், தனக்குச் சார்பான பொம்மை அரசொன்றையும் அங்கு நிறுவியது.

அந்த அரசு வியட்நாமிய மக்கள் மீது பல்வேறு விதமான அடக்குமுறைகளை அமெரிக்காவின் உதவியுடன் கட்டவிழ்த்து விட்டது. ஒரு கட்டத்தில் தென் வியட்நாமிய அரச படைகளால் 9 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வியட்நாமிய பௌத்த பிக்கு ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி மரணித்தார். அது வியட்நாமில் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இது பற்றி ஜனாதிபதி கெனடிக்கு அனுப்பிய தந்தியொன்றில் சிறீமாவோ பண்டாரநாயக்க வினவியிருந்ததுடன் ஆட்சேபனையும் தெரிவித்திருந்தார். அத்துடன் உலக சமாதானத்துக்கு பங்கம் ஏற்படும் வகையில் அமெரிக்கா பசுபிக் கடற்பிராந்தியத்தில் மேற்கொண்ட அணுவாயுத சோதனை பற்றியும் கெனடியிடம் பிரஸ்தாபித்திருந்தார்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க வெளிநாட்டு சக்திகளின் கையாள் என்று கருதப்படும் கொலையாளி ஒருவனால் 1957 செப்ரெம்பரில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பின்னர், 1960 பொதுத் தேர்தல் மூலம் சிறீமாவோ அரசியலில் பிரவேசித்து நாட்டின் பிரதமரானார்.

அதைத் தொடர்ந்து தனது கணவர் கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பை சிறீமாவோவும் தொடர்ந்தார். இந்த நடவடிக்கைகளில் ஒன்றாக அந்நியருக்குச் சொந்தமான எண்ணெய் கொம்பனிகள் தேசியமயமாக்கப்பட்ட பொழுது, அமெரிக்க எண்ணெய் கொம்பனிகளும் தேசியமயமாக்கப்பட்டன. அதுபற்றியே வெள்ளை மாளிகை பாதுகாப்பு அதிகாரி கொமெர் கெனடிக்கு அனுப்பிய இரகசியக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சி அரசின் பங்காளியாக இருந்ததுடன், அக்கட்சியின் தலைவர் டொக்டர் என்.எம்.பெரேரா நிதி அமைச்சராகவும் இருந்தார். அதனால் சிறீமாவோ அரசின் தேசியமய நடவடிக்கைகள் இடதுசாரிகளின் தூண்டுதலினால்தான் நடைபெற்றவை என்ற தவறான அபிப்பிராயம் அமெரிக்காவிலும் மேற்கு நாடுகளிலும் நிலவியது.

இடதுசாரிக் கட்சிகள் இலங்கையிலிருந்த அந்நியருக்குச் சொந்தமான கொம்பனிகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரி வந்தமை உண்மை என்றபோதிலும் அது மட்டும் சிறீமாவோ அரசின் நடவடிக்கைகளுக்குக் காரணமாக அமைந்துவிடவில்லை. இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத 1956ஆம் ஆண்டிலேயே பண்டாரநாயக்க தேசியமய நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார்.

பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு சோசலிசக் கட்சி அல்லவென்றபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சி போல ஏகாதிபத்தியத்துக்குத் துணை போகாமல் தேசப்க்தக் கட்சியாக இருந்தது. அதனால்தான் 60 களில் சிறீமாவோ அரசில் இடதுசாரிக் கட்சியான சமசமாஜக் கட்சியினாலும் பின்னர் 1970இல் கம்யூனிஸ்ட் கட்சியினாலும் கூட்டுச் சேர முடிந்தது. அந்த நிலைமை இன்றுவரை நீடிக்கின்றது.

இடதுசாரிக் கட்சிகள் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசுகளில் கூட்டுச் சேர்ந்த வரலாறு தனியானது. அவ்வாறு சேர்ந்ததால்தான் பல முற்போக்கு நடவடிக்கைகளை அந்த அரசுகள் மேற்கொள்ள முடிந்தது என்ற வாதமும், அப்படிச் சேர்ந்ததின் காரணமாகவே இடதுசாரிக் கட்சிகள் மக்களின் நம்பிக்கையையும் தமது தனித்துவத்தையும் இழந்து இன்று மிகவும் பலவீனப்பட்ட நிலையை அடைந்துள்ளன என்ற வாதமும் இன்று வரை முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அது பற்றி வாதிப்பது இங்கு எமது நோக்கமல்ல.

1960இல் பதவிக்கு வந்த சிறீமாவோ அரசு மிகவும் பலவீனமான நிலையிலேயே இருந்தது. அதற்கு ஏகாதிபத்திய சக்திகளினதும் ஐ.தே.க தலைமையிலான உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளினதும் வலுவான எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது.

மறுபக்கத்தில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி மூன்றும் சேர்ந்து “இடதுசாரி ஐக்கிய முன்னணி” என்ற வலுவான முன்னணி ஒன்றை அமைத்து, தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் பிரசித்தி பெற்ற 21 கோரிக்கைகளை (பிரதான கோரிக்கை நளொன்றுக்கு 1ரூபா சம்பள உயர்வு) முன்வைத்து 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தால் போன்ற நடவடிக்கை ஒன்றுக்குத் தயாராகி வந்தன.

இந்த இருபக்க நெருக்கடிகளாலும் சிறீமாவோ அரசு அல்லாட வேண்டி ஏற்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளிடமும் உள்ளூர் பிற்போக்கு சக்திகளிடமும் அடிபணிவதா அல்லது இடதுசாரிகளின் ஆதரவைப் பெறுவதா என்ற கேள்வி சிறீமாவோ அரசின் முன் எழுந்து நின்றது. சிறீமாவோ இடதுசாரிகளின் ஆதரவைப் பெறத் தீர்மானித்தார்.

அதன் அடிப்படையில் சமசமாஜக் கட்சி அரசுடன் இணைந்து கொண்டது. அந்தக் கட்சி இடதுசாரி முன்னணியை உடைத்துக் கொண்டு அரசில் சேர்ந்ததால், அதன் செயற்பாடு “துரோகம்”, “காட்டிக் கொடுப்பு” என ஏனைய இடதுசாரிக் கட்சிகளால் விமர்சிக்கப்பட்டது.

ஆனால் அடுத்து 1965இல் ஆட்சிக்கு வந்த ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க அரசில் பிலிப் குணவர்த்தன இணைந்து மந்திரியானார்! கம்யூனிஸ்ட் கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி என்பனவற்றுடன் கூட்டுச் சேர்ந்ததுடன் 1970இல் இருந்து அதன் அரசாங்கங்களிலும் பங்கேற்று வருகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)



1963 ஆண்டு யூன் 11 இல் திச் குவாங் டுச் (Thich Quang Duc) என்ற பௌத்த பிக்கு தென் வியட்நாமின் சைகோன் நகரில் தீக்குளித்தார்.

**இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியம் என்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளால் அரை நூற்றாண்டுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அமெரிக்காவும் இதர மேற்குலக சக்திகளும் இலங்கையில் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதி யுத்த நிலைமைகளைச் சாக்காக வைத்து இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் காட்டிக் கொண்டாலும் இலங்கைக்கும் அவற்றுக்குமான உறவுச் சீர்குலைவு எப்பொழுதோ ஏற்பட்ட ஒன்றாகும்.**

# கொழும்பு- வடக்கு அதிவேக நெடுஞ்சாலை யூலை மாதம் ஒப்பந்தம் கைச்சாத்து



கொழும்பில் இருந்து இலங்கையின் வடக்குப் பகுதிக்கான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தம் எதிர்வரும் ஜூலை மாதம் கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய திறைசேரியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் பி.ஓ.ரி. எனப்படும் நிர்மாணம்-நடைமுறை-மாற்றல் என்ற அடிப்படையின் கீழ் கைச்சாத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு வட பகுதி அதிவேக நெடுஞ்சாலையுடன், மலைநாட்டுடனான நெடுஞ்சாலையினையும் இணைப்பது குறித்தும் இந்த ஒப்பந்தத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையின் வறுமை 6 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் திறைசேரியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார்.

# பால்மாவின் விலையை குறைக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

பால் மா விலையைக் குறைக்குமாறு வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

உலக சந்தையில் பால் மாவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த விலை வீழ்ச்சியின் பயன்களை நுகர்வோர் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடந்த ஆறாம் திகதி ஒரு தொன் பால் மாவின் விலை 5200 அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது. தற்போது ஒரு தொன் பால் மாவின் விலை 3873 அமெரிக்க டொலர்களாகும்.

உலக சந்தையில் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்ட போது விலையை உயர்த்தியதனைப் போன்றே விலை குறைந்த போதிலும் அந்த நன்மைகளை நுகர்வோர் அனுபவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உலக சந்தையில் பால் மா விலை உயர்வடைந்துள்ளதாக போலியாகத் தெரிவித்து அரசாங்கத்தின் அனுமதியுட்ன் ஒரு கிலோ பால் மாவின் விலை 152 ரூபாவினால் உயர்த்தப்பட்டது.

உலக சந்தையில் பால் மாவின விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நன்மைகளை பொதுமக்கள் அனுபவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றேன் என விமல் வீரவன்ச வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

– தேர்தல்களுக்கான அறிகுறி –

# வாக்காளர் இடாப்பு திருத்தம் இவ்வாரம் ஆரம்பமாகின்றது

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் வாக்காளர் இடாப்பு திருத்தம் டிசம்பர் 31ஆம் திகதியே நிறைவு செய்யப்படுகின்ற போதும் இம்முறை இரண்டு மாதங்களுக்கு முன்னரே நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் வாக்காளர் இடாப்பு திருத்தம் 5 மாதங்கள் இடம்பெறவுள்ள நிலையில் ஒக்ரோபர் 31ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என பரவலாகப் பேசப்படுகிறது.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அரசியல் களத்தில் பேசப்பட்டு வரும் நிலையில் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து அரசாங்கத்திற்குள் பேச்சு வார்த்தை இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆசிரியையை முழந்தாழிட வைத்தவருக்கு 7 வருட ஒத்திவைப்பு சிறை

ஆசிரியை ஒருவரை முழந்தாழிட வைத்த வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத் குமாரவுக்கு 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

இதனைத் தவிர 50 ஆயிரம் ரூபா அபராதத்தையும் செலுத்துமாறு புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

இந்த அபராதத்தை செலுத்தத் தவறினால் மேலும் ஆறு மாத சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும் என அறிவித்த நீதிபதி, பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு மூன்று இலட்சம் ரூபா நட்டஈட்டினை வழங்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# அதிகரித்தது ஏற்றுமதி



கடந்த மார்ச் மாதம் இலங்கையின் ஏற்றுமதிகள் அதிகரிப்பை வெளிப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் இந்த காலப்பகுதியை விட 26 சதவீதம் அதிகரித்து, ஆயிரத்து 60 அமெரிக்க டொலர்களாக ஏற்றுமதிகள் காணப்பட்டன. தேயிலை ஏற்றுமதி 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதி 25.5 சதவீதத்தால் அதிகரித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதாரத்துறையின் அனைத்துதேவைகளையும் அரசால் மாத்திரம் நிறைவேற்றமுடியாது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

சுகாதாரத்துறையின அனைத்து தேவைகளையும் அரசாங்கத்தினாலோ அல்லது அமைச்சரினாலோ மாத்திரம் நிறை வேற்ற முடியாது என சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு பொலனறுவையில் நேற்றுஇடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.


பொலனறுவை வைத்திய சாலையின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நோயாளர்களின் பிரச்சினைகளின் போது அமைச்சரினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சிறிதாகவே காணப்படுகின்றது. செய்ய முடியாத பல விடயங்கள் உள்ளன. சுகாதாரத்துறையின அனைத்து தேவைகளையும் அரசாங்கத்தினால் மாத்திரம் நிறைவேற்ற முடியாது அதே போன்று அமைச்சரினாலும் இது முடியாது. அனைவரினதும் ஒத்துழைப்பின் ஊடாகவே தான் அவற்றை பெற்றுக் கொள்ளமுடியும். இன்று முன்னெடுக்கப்படும் விடயங்களை புலோறன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) உயிருடன் இருந்து அறிந்திருந்தால் என்ன செய்திருப்பாரென்று எனக்கு கூறமுடியாது. நான் நினைக்கின்றேன் சில வேளைகளில் அவர் இந்த விடயங்களை அறிந்திருந்தால் அதிர்ச்சியிலே உயிரிழந்திருப்பார்.

# சாதாரண பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேற்று விடுமுறை

## கவனம் செலுத்துகிறது மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)



வீட்டு பணியாளர்களாக செயற்படும் தரப்பினருக்கும், பெருந்தோட்டங்களைச் சார்ந்து தொழில்புரியும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டிய மகப்பேற்று விடுமுறை தொடர்பில் சட்ட மூலம் ஒன்றை தயாரிப்பதற்கு மனிதஉரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. தொழிற சங்கங்கள் மற்றும் குடியியல் அமைப்புக்கள் சிலவற்றுடன் இணைந்து கடந்த 9ஆம் திகதி மனிதஉரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்ட கலந்துரையாடலுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழுவின் சட்டத்துறை செயலாளர் நிமல் புஞ்சிஹேவா இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து சட்டரீதியான முன்னெடுப்புகளை மேற்கொள்ள எண்ணியுள்ளோம்.

வீட்டுப்பணியாளர்கள் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் சட்டதிட்ட ரீதியான தொழில் வர்க்கத்தினராக இது வரை ஏற்றுக்கொள்ளப்படாத நிலை உள்ளது.

எனவே, தற்போது எடுக்கப்பட்ட முடிவினால் சட்டரீதியான தொழில் துறையிராக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், அவர்களுக்கான உரிமைகளும் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தல் விடுக்கப்படும்.

இதுதவிர, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான அடிப்படை சலுகையாக மகப்பேற்று விடுமுறை வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் சார்பில் தொழிற்சங்கங்களின் ஊடாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புகைத்தலால் சுகாதார சீர்கேடு; சிகரெட் பெட்டிகளில் 60வீத விளம்பரம் நீதிமன்றம் அனுமதி




சிகரெட் பெட்டியொன்றில் 50 - 60 சதவீதமான பகுதியில் புகைத்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்து விளம்பரம் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் சுகாதார அமைச்சுக்கு நேற்று அனுமதி அளித்துள்ள்து.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த அனுமதி உததரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புகைத்தல் உடல் நலத்திற்கு கேடுவிளைவிக்கும் என்பதனை எடுத்துக்காட்டுகின்ற படங்களை சிகரெட் பெட்டிகளில் பிரசுரிப்பதறகான ஒழுங்குவிதிகள் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிகரெட் பெட்டிகளில் 80 வீதம் சுகாதார எச்சரிக்கை விளம்பரம் பிரசுரிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன யோசனை முன்வைத்தார்.

எனினும் புகையிலை நிறுவனங்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்நிலையில் சிகரெட் பெட்டியொன்றில் 50 - 60 சதவீதமான பகுதியில் புகைத்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்து விளம்பரம் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்த மனுமீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற் நீதியரசர்களான அனில் குணரத்ன மற்றும் மாலினி குணரத்ன ஆகியோர் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே நீதிமன்றம் மேறகண்ட உத்தரவை பிறப்பித்துள்ளது.

# யாழ்.வலய தமிழ்த்தினப் போட்டிகளில்
# இந்துக் கல்லூரி மாணவர்கள் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய தமிழ்மொழித் தின போட்டிகளில் வருடா வருடம் நிகழும் யாழ்.இந்துவின் சாதனைகள் இவ் வருடமும் தொடர்கின்றது.

2014 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியின் ஓர் அங்கமாகிய யாழ்.வலயப் போட்டிகளில் யாழ்.இந்துக்கல்லூரி பங்குபற்றிய ஏழு போட்டிகளில் ஆறு போட்டிகளில் முதலாம் இடத்தையும் ஒரு இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனைப் பயணத்தை தொடர்கின்றது.

இதுவரை காலமும் வில்லுப்பாட்டில் பல தேசிய மட்டங்களை வென்று. தகர்க்க முடியாத கோட்டையாக இருந்த யாழ்.பரியோவான் கல்லூரியை யாழ்.இந்துவின் மாணவர்கள் தகர்த்து வெற்றி கொண்டுள்ள அதேசமயம் தொடர்ந்து ஆறாவது வருடமாக விவாதப்போட்டியின் வலய மட்ட சம்பியன் ஆக இந்துவின் விவாத மாணவர்கள் வலம் வருகின்றனர்.

மேலும் தனி இசை பிரிவு நான்கு போட்டியில் கல்லூரிக்கு பல விருதுகளையும், தங்கப் பதக்கங்களையும் வென்று யாழ்.இந்துவுக்கு புகழ் மாலை சேர்த்துக் கொடுத்த . வி.வத்சாங்கித சர்மா இவ் வருடமும் முதலிடம் பெற்றுள்ளார்.

ம.கஜகிருஷ்ணா பிரிவு நான்கு பாவோதல் போட்டியில் முதலிடத்தை வென்றுள்ளார்,

அத்துடன் பிரிவு இரண்டு பேச்சுப்போட்டியில் உ.சுகிதன், பிரிவு மூன்று பேச்சுப்போட்டியில் உ.விதுஷன் ஆகியோரும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

பிரிவு இரண்டு வாசிப்பு போட்டியில் த.கீர்த்திகன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (48)




சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன். றஞ்சித் பெர்னாண்டோ நெல்லியடி மாவட்ட லயன் கழகத்திற்கு வருகை தந்த போது நெல்லியடி ஐங்கரன் பொழுதுபோக்கு கழகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார். இதனைத்தொடர்ந்து வரவேற்புரையை லயன். எஸ்.ஞானதாஸ் நிகழ்த்துவதையும் அருகில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (01)

# இரதோற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி, இடைக்காடு திருவருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய இரதோற்சவம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. வியாழக்கிழமை பூங்காவன உற்சவத்தின்போது மாலை 5 மணிக்கு அபிஷேகமும் 7 மணிக்கு திருவூஞ்சலில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (85)

# வெசாக்தினத்தை முன்னிட்டு
# வர்த்தக விவசாய நிலையங்கள் மூட அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு நாளை, நாளைமறுதினம் அனைத்து வர்த்தக வியாபார நிலையங்களை மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினிவரதலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் அன்றைய தினங்களில் மதுபானக்கடைகளை மூடுவதற்கும் சிறப்பு அங்காடிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும் இறைச்சி வெட்டும் நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட்டக் கூடங்கள், இறைச்சிக்கடைகள் மற்றும் கழகங்கள் அனைத்தையும் சிறப்பு அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அனைவரையும் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கதிர்காம கந்தனின் பாதயாத்திரை
# வடக்கு கிழக்கில் இருந்து ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம உற்சவத்திற்கான வருடாந்த பாத யாத்திரை எதிர்வரும் 29 ஆம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

கதிர்காமக் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் ஜீலை மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வருடம்தோறும் பல்வேறு அடியார் கூட்டங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து முறைப்படி திட்டமிட்டு சமய ஆசாரங்களுடன் கடந்த பல வருடங்களாக முருகபக்தரான வேல்சாமி குழுவினர் பாதயாத்திரையினை மேற்கொண்டு வருகின்றனர்.

1999 இல் அமெரிக்க முருகபக்தரான பற்றிக்ஹரிகன் ஆரம்பித்து வைத்த இப்பாதயாத்திரை இவ்வருடம் 15 ஆவது தடவையாக நடைபெறுகிறது.

2007 இல் இருந்து காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி தலைமையில் நடைபெற்று வருகிறது இரண்டு மாதகால யாத்திரையானது எதிர்வரும் 29 ஆம் திகதி செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி வற்றாப்பளை குமுழு முனை, கொக்குத்தொடுவாய் ஊடாக ஜீன் 15 ஆம் திகதி கொக்கிளாய் புல்மோட்டையை அடையும்.

அங்கிருந்து கும்புறுப்பிட்டி, வாகரை ஊடாக நிலாவெளி, திருகோணமலை, கிளிவெட்டி, வாகரை ஊடாக ஜீன் 30 ஆம் திகதி அமிர்த கழியை அடையும். பின்பு கல்லடி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, காரைதீவு, ஆலையடிவேம்பு, திருக்கோவில் ஊடாக ஜீலை மாதம் 15 ஆம் திகதி பாணமையை அடையும். இப்பாதயாத்திரை குழுவினர் ஜீலை 16 இல் உகந்தைமலையை அடைந்து குமுக்கன், கட்டகாமம் ஊடாக ஜீலை 26 இல் கதிர்காமத்தைச் சென்றடைவர். (10)

# உடுவில் மீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தின் தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு இடம் பெறவுள்ளது. காலை 7 மணிக்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து மு.ப 11 மணியளவில் அம்பாள் தேரிலே ஆரோகணித்து பக்தர்களுக்கு அருளாசியினை வழங்குவர்.

இத்தேர் உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்கள் பூஜைக்குரிய பொருடகளினைக் கொண்டு வருவதுடன் உற்சவத்தில் கலந்து கொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

நாளை முற்பகல் 11 மணியளவில் அம்பாள் எழுந்தருளி தீர்த்தமாடும் நிகழ்வும் மாலை கொடியிறக்கல், ஊஞ்சல் உற்சவம் என் பன இடம்பெறவுள்ளதுடன் வியாழக்கிழமை மாலை பூங்காவன உற்சவம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளார்கள்.(63)

# முரசின் இன்றைய பலன்



[13.05.2014 செவ்வாய்க்கிழமை]

ஜய வருஷம் சித்திரை மாதம் 30 ஆம் திகதி.
சதுர்த்தசி / சித்தம்.
சித்திரை நட்சத்திரம் மு.ப. 07.23 வரை. பின் சுவாதி.
இராகு காலம் 02.54 - 04.24 வரை. சுபநேரம் 10.24 - 11.54 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | திட்டமிட்டதால் பணியை உரிய வேளையில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் முடித்தல், உங்கள் பேச்சில் விரக்தியின் நிலைப்பாடு வெளிப்படலாம். |
| ரிஷபம் | பொது இடங்களில் விடுப்புப் பார்ப்பதையும் அதிக நேரம் நிற்பதையும் கைவிடுங்கள், வெளியூர் பயணத்திட்டத்தில் அதிரடி முடிவினை ஏற்படுத்துவீர்கள். |
| மிதுனம் | தோழனிடமும் ஏழ்மை பற்றிப்பேச வேண்டாம், இதனால் கிடைக்கப் பெறுகின்ற உதவி கிட்டாது போய் விடலாம், பொறுமை சகிப்புத்தன்மையினால் காரிய சித்தி ஏற்படும். |
| கடகம் | சகோதரர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு விட்டுக் கொடுப்பினால் சுமுகநிலைக்குவரல், உங்களின் மனத்துயரைப் பிறரிடம் கூறுவதினால் ஆறுதலடைந்து மனப்பாரம் குறையும். |
| சிம்மம் | அன்றாடப்பணிகளில் நிலுவைகள் வைக்காமல் சக ஊழியர்களின் உதவியுடன் நிறைசேற்றி வையுங்கள், நண்பர்களுடன் பேசுவதில் முன்யோசனையுடன் செயற்படுங்கள். |
| கன்னி | குடும்பபாரம் கூடியதால் பதகளிப்பும் சோர்வும் தக்க வைக்கும் சிறு பணியையும் ஆர்வத்துடனும் நேர்த்தியுடனும் நிறைவேற்றி வையுங்கள். |
| துலாம் | கொடுக்கல்வாங்கல சுமுகமாக நடப்பதினால் உளத திருப்தியடைதல், பொறுப்பின்றி எவருக்கும் பணம், நகை கொடுத்து வேதனையைத் தக்க வைக்கவேண்டாம் |
| விருச்சிகம் | நீண்ட நாட்களாக இழுபட்ட நிலுவை கைக்கெட்டிய தால் மிகழ்ச்சி, பாரபட்சம் காட்டியதினால் சக ஊழியர் மத்தியில் ரகளை வெடித்தல். |
| தனுசு | அனுபவ சாலிகளின் ஆலோசனைகளைப் பெறுவதினால் பணி சிறந்து விளங்கும், தொழிலில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலைவிலகிப்போகும். |
| மகரம் | ஜாதகப்பலன் பாதகமாக இருப்பதை அறிந்து வெளியூர் பயணத்தைக்கைவிடல், உங்கள் செயல்களில் பிறரினை நலன்கருதும்மனோநிலை தக்க வைத்ததால்பெருமை சேரல். |
| கும்பம் | பொறுமை, நியாய குணத்தைக் கடைப்பிடிப்பதினால் துயரம் விலகிவிடும், இடையூறு செய்பவர்கள் தாமாக விலகிப்போகின்ற நல்லநிலை உருவாகும். |
| மீனம் | சுபகாரியம் எதிர்பாராமல் நடந்ததினால் நிகழ்வினைக கொண்டாட பணத்தேவைக்கு கடன்படல், உங் களைப் பிறர் ஏளனமாக பேசுகின்ற மாறுபட்ட சூழ்நிலை ஏற்பட இடமுண்டு. |

# வாழ்வுக்கு வழிகாட்டும் சகுனஜோதிடம்
## விலங்குகளின் சகுனங்கள்

பயணம் ஆரம்பிக்கையில் நாய் வலப்புறத்திலிருந்து இடப்புறம் நோக்கிச் சென்றால் - நன்மை விளையும். எதிரில் வந்து முகர்ந்து பார்த்தால் பயணம் வெற்றி தரும். நமக்கு முன்னே ஓடினால் தொடர்வெற்றிகள் தக்க வைக்கும். அன்புடன் குரைத்துக் கொண்டு வருவதும் நன்மைக்கேயாகும். நாய் தனியாகத்தன் வாயில் செருப்பு, தோற்பொருட்கள், எலும்புத்துண்டினை கௌவிக் கொண்டு பார்த்தாலும் எதிரில் நின்றாலும் காரிய சித்தி கிட்டும். தனது குட்டிகளுடன் எதிர்நோக்கி வருவதினாலும் எடுத்த செயல் வெற்றியை தரும். திரவப் பொருளை நக்கிக்கொண்டிருப்பின் பேச்சு தோல்வியில் முடியும். விற்பனைப் பொருட்களைக் கொண்டு செல்கையில் குட்டிகளுக்குப்பால் கொடுத்துக் கொண்டிருப்பின் பொருட்களின் விற்பனை பாதிக்கப்படும். விற்ற பணம் திருட்டுப்போய் விடலாம். எதிரேவரும் நாயைத் துரத்தும் போது நன்மைவிட்டுவிலகாது உரத்த குரலில் குரைத்தால் பயணத்தால் நட்டமும் பழிபாவமும் வந்தடையும். வாலைத்தூக்கிக் கொண்டு படுத்திருந்தால் - பயணத்தைக் கைவிடல் நன்றாகும். நமது தோல்களை நக்கினால், முத்தமிட்டால் - எதிரிகளினால் தொல்லைகள் ஏற்படும். ஊளையிட்டால் - அயலவர் ஒருவருக்கு கண்டம் ஏற்படலாம். சூரியனைநோக்கிக் குரைப்பது - நாட்டுக்கு கெடுதியைச் சுட்டும். சூரியன் உதிக்கையில் குரைப்பது - தீயினால் ஆபத்தும் மாலையில் சூரியனைப் பாாத்து குரைத்தால் - விவசாயிகளுக்கு கெடுதல், நள்ளிரவில் வட திசை நோக்கிக் குரைப்பின் பிராமணர்களுக்கு ஆகாது. நாய் முதலில் ஊரின் நடுவில் குரைப் பின் சுடுகாட்டுக்குச் சென்று குரைப்பின் முக்கிய பிரமுகருக்கு மரணம் சம் பவிக்கலாம். வாயில் கயிற்றைக் கௌவிக் கொண்டு வந்தால் சிறைவாசம் நேரிடும். மலம் கழிப்பதைக் கண்மால் காரியத்தடை ஏற்படும். (தொடரும்)

ஜோதிர் விதயா ரதனா
வி.ஏ.சிவராசா

# மட்ரின் ஓப்பன்; நடால், ஷரபோவா சம்பியன்





(மட்ரிட்)

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் கிண்ணத்தை நடால் மற்றும் ஷரபோவா ஆகியோர் கைப்பற்றிக் கொண்டனர்.

ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜப்பான் வீரர் நிஷீக்கோரி மற்றும் ஸ்பெயின் வீரர் நடால் ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தினர். முதல் செட்டை இழந்த நடால் பின்னர் சுதாகரித்து ஆடினார். மூன்றாவது செட்டில் நடாலில் ஆதிக்கம் வலுப்பெற்றது. இந்நிலையில் காயம் காரணமாக நீஷீக்கோரி விலகிக் கொண்டார். இறுதியில் 2-6, 6-4, 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றார்.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா மற்றும் ஹாலெப் ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தினர். இதில் ஷரபோவா 2-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றார்.

இதேவேளை வெற்றிக் குறித்து கருத்துத் தெரிவித்த ஷரபோவா, கிண்ணம் வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. பிரெஞ் ஓப்பன் போட்டி விரைவில் நடைபெறவுள்ள நிலையில் களிமண் களத்தில் பெற்ற இந்த வெற்றி பெரும் ஊக்கத்தை அளிக்கின்றது. கடந்த ஆண்டு மிகவும் இரசியில்லாத ஆண்டாக அமைந்திருந்தது. இருப்பினும் இந்த ஆண்டு சில தொடர்களில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது கவலை. பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**சென்னை எதிர் ராஜஸ்தான்**

**இடம்: ராஞ்சி. நேரம்: மாலை 4 மணி**

**பெங்களூர் எதிர் டில்லி**

**இடம்: பெங்களூர். நேரம்: இரவு 8 மணி**

## ஐ.பி.எல். துளிகள்...

மகள் பிறந்த பின்னர் அதிர்ஷ்டம் வந்து விட்டதாக உணர்கிறேன். அணியின் வெற்றிக்குப் பங்களிப்பு அளிப்பது இனிமையான விடயம். என்னையும், சேவாக்கையும் ஒப்பிட வேண்டாம். அவர் எப்போதும் என்னை விட சிறந்தவர்.

**கம்பீர் (கொல்கத்தா அணிக் கப்டன்)**

ஒவ்வொரு கட்டத்திலும் பெங்களூர் அணியை விட எங்களது ஓட்ட விகிதம் அதிகமாக இருந்தது. கடைசி 5 ஓவரில் ஏதாவது செய்ய முடியும் என்று நாங்கள் நம்பினோம். ஸ்மித்தும், போல்க்னரும் ஆட்டத்தை சிறப்பாக முடித்தனர். உண்மையில் இந்தப் போட்டி இரசிகர்களுக்கு பெரு விருந்தாக இருந்திருக்கும்.

**வட்சன் (ராஜஸ்தான் அணிக் கப்டன்)**

கடைசிக் கட்டத்தில் ராஜஸ்தான் அணி துடுப்பாட்ட வீரர்களுக்கு யோர்க்கர் பந்துகளை அதிகம் வீசியிருக்க வேண்டும். நான்கு ஓவர்களில் 64 ஓட்டங்களை பெற்றுக்கொள்வது 10 ஆட்டங்களுக்கு ஒரு முறைதான் நடைபெறும். ராஜஸ்தான் வீரர்கள் மிகவும் சிறப்பாக ஆடி எங்கள் வெற்றியைப் பறித்து விட்டனர். வெற்றிக்காகப் போராடியபோதும் அதிர்ஷ்டம் எங்கள் பக்கம் இல்லாதது வருத்தமளிக்கின்றது.

**ஹோலி, (பெங்களூர் அணிக் கப்டன்)**

சொந்த மண்ணில் சென்னை அணிக்கு எதிராக தோல்வி கண்டது ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும் மும்பை அணி "பிளே-ஓப்" சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளது. மீதமுள்ள போட்டிகளில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது, சவாலான விடயம். ருவென்டி-20 போட்டியில் ஆட்டத்திற்கு ஏற்ப, எந்த வரிசையிலும் ஆடத் தயாராக உள்ளேன். இத்தொடரில் எனது துடுப்பாட்டம் திருப்தி அளிக்கிறது.

**அம்பதி ராயுடு (மும்பை)**

## பங்களாதேஷிற்கான சுற்றுலா டோனி, ஹோலி விலகல்

(புதுடில்லி)

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் நிறைவடைந்த பின்னர் இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷிற்கு கிரிக்கெட் விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இதன் பிரகாரம் இரண்டு அணிகளுக்கும் இடையில் யூன் 15,17 மற்றும் 19 ஆம் திகதிகளில் மூன்று சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

தனிப்பட்ட காரணங்களுக்காக டோனியும் ஹோலியும் இந்தத் தொடரில் விளையாட மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் தலைவராக புதிய ஒருவர் நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோகித் சர்மா அல்லது ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோரில் ஒருவர் இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்படும் சாத்தியம் உள்ளதாக இந்திய கிரிக்கெட் சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## காலப்பந்து போட்டியில் கலவரம் 15 இரசிகர்கள் மரணம்




காங்கோ நாட்டில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியின்போது ஏற்பட்ட கலவரத்தில் 15 பேர் பலியாகியுள்ளனர்.

ஆபிரிக்க நாடான காங்கோ தலைநகர் கின்ஷசாவில் கால்பந்து போட்டி நடைபெற்றது. அதில், கின்ஷசா அணியும், லுபும் பாஷி நகர அணியும்மோதின. முடிவில் லுபும்பாஷி அணி கின்ஷசா அணியை 1-0 கோல் கணக்கில் வென்றது. இதனால் கின்ஷசா அணி இரசிகர்கள் கடும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்து ரகளையில் ஈடுபட்டனர்.

அதைத்தொடர்ந்து ரகளையில் ஈடுபட்டவர்களை பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் தடுத்தனர். அப்போது 4 பொலிஸார் தாக்கப்பட்டு காயமடைந்தனர். எனவே கலவரக்காரர்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வெடித்தனர்.

இதனால் கால்பந்து போட்டியை காண வந்திருந்த பொது மக்கள் மைதானத்துக்கு வெளியே ஓடினர். ஆனால் வாசல் குறுகியதாக இருந்ததால் உடனே அனைவரும் வெளியேற முடியாததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அதில் சிக்கி 15 பேர் அதே இடத் தில் பரிதாபமாக இறந்தனர். 24 பேர் காயம் அடைந்து அங்கு அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

## நடுவர் அதிரடி நீக்கம்

ஐ.பி.எல். போட்டிகளுக்கு நடுவராக செயற்பட்ட சஞ்சய் ஹசாரே (இந்தியாவைச் சேர்ந்தவர்) நடுவர் குழுவிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். ராஜஸ்தான்-டில்லி அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் போது டில்லி அணிக் கப்டன் கெவின் பீற்றர்சனுக்கு ரன்-அவுட் கேட்டு முறையீடு செய்யப்பட்டது. ஆனால் மூன்றாவது நடுவரின் ஆலோசனை பெறாமலேயே வீரர்களின் முறையீட்டை நடுவர் சஞ்சய் ஹசாரே நிராகரித்தார். ஆனால் தொலைக்காட்சி ரீப்ளேயில் பீற்றர்சன் ரன்-அவுட் ஆகியிருப்பது தெளிவாகத் தெரிந்தது. இந்த தவறுக்காக அவர் எஞ்சிய போட்டிகளில் இருந்து கழற்றி விடப்பட்டிருக்கிறார்.

## மன்செஸ்டர் சிட்டி சம்பியன்

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டதொடரில் மன்செஸ்டர் சிட்டி அணி சம்பியன் ஆகியுள்ளது. நேற்று வெஸ்ட் ஹாம் ஜூனைட்டட் அணியுடனான போட்டியில் 2 இற்கு 0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இந்த வருடத்திற்க்கான முதலிடத்தை உறுதி செய்தது. மன்செஸ்டர் சிட்டி அணி விளையாடிய 38 போட்டிகளில் 27இல் வெற்றி பெற்று 6 போட்டிகளை சமநிலையில் நிறைவு செய்த அதேவேளை, 5 போட்டிகளில் தோல்வியை சந்த்திதுள்ளது. கடந்த மூன்று வருடங்களுக்குள் மன்செஸ்டர் சிட்டி அணி இரண்டாவது தடவையாக சம்பியன் ஆகியுள்ளது. இங்கிலாந்து பிரீமியர் லீக் வரலாற்றில் நான்காவது தடவையாக மன்செஸ்டர் சிட்டி அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.




**கால்பந்து திருவிழா இன்னும் 29 நாட்கள்**




# உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?



**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்

## கமரூன் சிறு பார்வை

கமரூன் நாட்டின் மக்கள்தொகை இரண்டு கோடி. ஏற்கனவே ஆறு தடவைகள் உலக கிண்ணத்தில் விளையாடத் தகுதி பெற்றிருந்தாலும் 1990இல் மட்டுமே குழு நிலையிலிருந்து இரண்டாம் கட்டத்திற்கு முன்னேறி, கா்லிறுதிப் போட்டியில் பங்கு கொண்டது.

காலிறுதி வரை முன்னேறிய முதலாவது ஆபிரிக்க நாடு இதுவேயாகும். நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமான, 33 வயதுடைய, முன்கள வீரர் சாமுவல் எற்ருஓ ( Samuel Eto'o) இந்த அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

28 வயது ஸ்ரெபேன் பியா (Stephane Mbia), மற்றும் 17 வயது மட்டுமேயான பப்ரிஸ் ஒலிங்கா (Fabrice Olinga) ஆகியோர் அணியின் ஜொலிக்கக் கூடிய ஏனைய இரு துருவங்களாக உள்ளனர். இந்த அணியில் 24 இற்கும் 28இற்கும் இடைப்பட்ட வயதுடைய வீரர்களே அதிகமாக உள்ளனர். 65 வயதுடைய ஜேர்மனியைச் சேர்ந்த வொல்கர் பிங்கெ (Volker Finke) பயிற்சியாளராவார்.





யாழ். மாவட்டப் படைகளின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தின் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் எல்லேப் போட்டிகளை அபிவிருத்தி செய்யும் முகமாக இராணுவ அணிகளுக்கிடையிலான எல்லேக் காட்சிப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டது. இதில் இராணுவ ஆண், பெண் எல்லே அணிகள் பங்குபற்றியிருந்ததுடன், யாழ்.மாவட்டத்திலுள்ள கழகங்கள் மற்றும் பாடசாலைகளின் எல்லே வீரர், வீராங்கனைகள் இந்தக் காட்சிப் போட்டிகளைப் பார்த்து, நுணுக்கங்களை அறிந்து கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா கலந்துகொண்டார். இதில் எல்லே வீர,வீராங்கனைகள் அணிவ்குத்து நிற்பதையும் உதயபெரேரா. பரிசில்கள் வழங்குவதையும் காணலாம். (படப்பிடிப்பு:இ.ராஜகுமார்)

# ஊர்காவற்றுறை, மானிப்பாய் பெண்கள் கல்லூரி உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியன்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மற்றும் மானிப்பாய் பெண்கள் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

இப்போட்டி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் வலிகாமம், தென்மராட்சி, தீவகம், வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பல பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி, இரண்டாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, மூன்றாமிடத்தை பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அணிகள் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை மானிப்பாய் பெண்கள் கல்லூரி, இரண்டாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணிகள் பிடித்துக் கொண்டன. இப்போட்டி நிகழ்வில் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (109)

# கிண்ணம் வென்றது லோட்டஸ்

யாழ். கூழாவடி முகாமிட்டுள்ள இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் லோட்டஸ் அணி சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம் பெற்றது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணியினை எதிர்த்து லோட்டஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி 15 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 116 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலையில் களமிறங்கிய லோட்டஸ் அணி 14.1 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (48)

## இரண்டாம் கட்டப் போட்டி அளவெட்டி அருணோதயாவில்

(அளவெட்டி)

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் முதற் கட்டப் போட்டிகள் நேற்றும் நேற்று முன்தினமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் இரண்டாம் கட்டப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# மத்தியஸ்தரின் தீர்ப்பை ஆட்சேபித்த சென். அன்ரனீஸிற்கு 6 மாத தடை

மத்தியஸ்தரின் தீர்ப்பை ஆட்சேபித்தமைக்காக பாசையூர் சென். அன்ரனீஸ் அணிக்கு ஆறு மாத காலம் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. டான் தொலைகாட்சியின் மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, டான் தொலைக்காட்சி (யாழ் ஒளி) நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 20ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் குருநகர் பாடுமீன் மற்றும் பாசையூர் சென். அன்ரனீஸ் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பாடுமீன் அணி வீரர் உதைத்த பந்து கோல் பரப்புக்குள் சென்றதாக போட்டி நடுவர் அறிவித்தார். ஆனால், பந்து கோல் பரப்புக்குள் செல்லவில்லையெனக் கூறி சென். அன்ரனீஸ் அணி வீரர்கள் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஆட்சேபித்து மைதானத்தைவிட்டு வெளியேறினார்கள். இதனையடுத்து இரு அணி ஆதரவாளர்களும் போட்டிக் களத்திற்குள் நுழைந்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பத்தால் போட்டியை தொடர்ந்தும் நடாத்த முடியாத நிலை ஏற்பட்டதுடன் அது கைவிடப்பட்டது.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணக் கால்பந்து லீக்கின் ஒழுங்கு நடவடிக்கைக்குழு மேற்படி சென். அன்ரனீஸ் அணிக்கு ஆறு மாத காலத் தடையை விதித்துள்ளது.

இத்தடை குறித்து ஒழுங்கு நடவடிக்கைக்குழு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, போட்டியின் இடையில் வெளியேறியமைக்காக சென். அன்ரனீஸ் அணியை வன்மையாகக் கண்டிப்பதுடன் போட்டியில் குழப்பதை ஏற்படுத்தி போட்டியிலிருந்து விலகியமைக்காக 5000 ரூபா தண்டமும் ஆறு (23-04-2014 - 23-10-2014) மாத காலம் எந்தப் போட்டிகளிலும் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பாடுமீன் அணி கோல் ஒன்றைப் போட்ட போது ஆதரவாளர்கள் மைதானத்திற்குள் இடையூறு விளைவித்தமைக்காக 1500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. போட்டியை நடாத்திய டான் தொலைக்காட்சி யாழ்.ஒளி, போட்டிக்குத்தகுந்த பாதுகாப்பும், ஒழுங்குகளும் முறையான ஏற்பாடுகளும் சரியான முறையில் மேற்கொள்ளப்படாததை அவதானிக்க முடிகின்றது. இனிவரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். மேற்படி போட்டியில் பாடுமீன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்.பி.)

# நெல்லியடி மகாத்மாவின் வருடாந்த விளையாட்டு விழா

(நெல்லியடி)

நெல்லியடி மகாத்மா விளையாட்டுக் கழகத்தின் 40 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் தடகளப் போட்டி உட்பட பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கழகத் தலைவர் கேசவன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி கங்கார, கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் முரளி, கிராம அலுவலர் சசிகுமார், கௌரவ விருந்தினர்களாக சமுர்த்தி மகாசங்கப் பணிப்பாளர் அன்ரனி, கனகராயன்குளம் மகாவித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் கனகராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (12)

# வடமாகாண கால்பந்து யாழ். மாவட்டம் சம்பியன்

(மன்னார்)

வடமாகாண அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்டம் இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றனன.

இதில் ஆண், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இதனால் போட்டி நிறைவுற்றவேலை இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யாழ். மாவட்ட அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யாழ். மாவட்ட அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இதேவேளை, மென்பந்து கிரிக்கெட், பட்மின்ரன், மேசைப்பந்து போன்ற போட்டிகள் மான்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளிலும் யாழ். மாவட்ட அணி முதலிடத்தைப் பிடித்து அசத்தும் என எதிர்பார்க்கின்றோம் என யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக். கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12,93)

# புலிகளுக்கு புத்துயிர் ஊட்டும் முயற்சி முறியடிக்கப்பட்ட பின்னணிக் கதை (5)

- டி.பி.எஸ். ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

இரண்டாவது எல்.ரீ.ரீ.ஈ புத்துயிர்ப்பு முயற்சி டிசம்பர் 2012இல் கண்டு பிடிக்கப்பட்டது. கொழும்பில் வைத்து புனர்வாழ்வு வழங்கப்படாத ஒரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் 2012 டிசம்பர் முதல் வாரத்தில் கைது செய்யப்பட்டதும் அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் விளைவாக ஒரு குழப்பமான கண்டுபிடிப்பு கிடைத்தது. தமிழ்நாடு சென்னையில் செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ வலையமைப்பின் விபரங்கள், ஐரோப்பாவிலுள்ள புலி சக்திகளின் நிதி விபரங்கள் என்பன பூர்வாங்க விசாரணைகளில் வெளிச்சத்துக்கு வந்தன.

மேலதிக விசாரணைகள், யாழ்ப்பாணத்தில் உள்ள மேலும் ஆறு வாலிபர்களைக் கைது செய்ய வழி வகுத்தது, தமிழ்நாட்டு புலி வலையமைப்புடன் அவர்கள் தொடர்பு கொண்டிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டார்கள். இந்த ஆறு பேரில் இருவர் முன்னாள் பெண் புலிகளாவார்கள், அவர்கள் புனர்வாழ்வு பெற்றதின் பின்னர் விடுதலையானவர்கள். பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் இருவரை தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டு விட்டார்கள்.

காவலில் உள்ள சந்தேக நபர்களிடமிருந்து மேலும் அதிக தகவல்கள் பெறப்பட்டன. அவை அதிர்ச்சியை வெளிப்படுத்தின. தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த இளைஞர்கள் தெரிவித்ததின்படி. தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் இளைஞர்களிடையே தமிழீழ அனுதாபிகளை ஆட்சேர்ப்பு செய்து, தீவிரவாத எல்.ரீ.ரீ.ஈ சித்தாந்தத்தை அவர்களுக்கு போதிப்பதற்கான இரகசிய பிரசாரம் நடந்து வருகிறது. மின்னணு மற்றும் வெடிபொருட்களில் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். இறுதி இலக்காக இலங்கைக்குள் ஊடுருவி கேந்திர முக்கியம் வாய்ந்த இடங்கள் மற்றும் முக்கியமான நபர்கள் மீது தாக்குதல் நடத்துவது. இந்த திட்டத்துக்காக ஐரோப்பாவிலுள்ள புலி சக்திகள் நிதியுதவி அளித்துள்ளன.



இலங்கை அதிகாரிகள் இந்தத் தகவலை மெதுவாக இந்தியாவிலுள்ள தங்கள் சகாக்களுக்கு அறிவித்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈக்கு சார்பான அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு இந்தத் தகவல் கசிந்து விடாமல் இருப்பதை தவிர்க்க அதிகளவு கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மாநில காவல் துறையின் விசேட உள்வுத்துறைப் பிரிவான கியு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று, டிசம்பர் 19, இரவில் ஒரு திடீர் சோதனையை நடத்தியது. சென்னையை அடுத்துள்ள புறநகரான பல்லாவரத்தில் உள்ள பம்மல் பகுதியில் உள்ள நல்லதம்பி தெரு வீடொன்று சுற்றிவளைக்கப் பட்டு காவல்துறை அதற்குள் புகுந்தது. அந்த வாடகை வீட்டில் குடியிருந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள், எஸ். சுரேஸ்குமார், டி.உதயதாஸ், ரி.மகேஸ்வரன் மற்றும் கே.கிருஸ்ணமூர்த்தி ஆவார்கள். அவர்களது வயது, முறையே 34, 39, 33 மற்றும் 29 ஆகும்.

அப்பொழுது டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த செய்தியின்படி, ஈழப்போரின்போது நடந்த ஒரு வெடிப்பில் சுரேஸ்குமார் தனது கால்களை இழந்து இப்போது சக்கரநாற்காலியிலேயே இயங்கி வருகிறார் என்றும், இவர்களில் இரண்டு பேர் 2001 மற்றும் 2003இல் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்ததாகவும் ஏனையவர்கள் இறுதிக்கட்ட போரின் போது, 2009இல் வந்தவர்கள் என்றும் ஒரு உளவுத் துறை அதிகாரி தெரிவித்திருப்பதாக கூறப்பட்டது.

அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது: "சுரேஸ்குமார் வெடி பொருட்களை தயாரிக்கும் எல்.ரீ.ரீ.ஈ பிரிவு ஒன்றுக்கு தலைமை தாங்கியிருந்தார். அவர் மின்னணு சுற்றுக்களைத் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர் அங்கிருந்து நாங்கள் இரண்டு மடிக்கணனிகள், ஆவணங்கள், கேபிள்கள், மற்றும் மின்னணு சுற்றுப் பலகைகள் எனப் பல பொருட்களைக் கைப்பற்றியுள்ளோம்" என்று அந்த அதிகாரி கூறியதாக பிரசுரமாகியிருந்தது.

கிருஸ்ணமூர்த்தி அந்த சுற்றுவட்டாரத்துக்கு தண்ணீர் கான்களை விநியோகித்து வந்துள்ளார், அவர் இலங்கைத் தமிழர்களுடன் நட்பாக பழகி அவர்களை சுரேஸ்குமாரிடத்தில் அழைத்துச் சென்றிருக்கிறார். முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர், வெடிபொருட்கள் மற்றும் பல்வேறு ரகமான குண்டுகளுக்குரிய மின்னணு சுற்றுக்கள் என்பனவற்றை தயாரிக்க பயிற்சி அளித்துள்ளார் என விசாரணையாளர்கள் தெரிவித்தார்கள்.

விசாரணையின்போது கைது செய்யப்பட்டவர்கள் பம்மலில் உள்ள வீட்டை இரண்டு மாதங்களுக்கு முன்னர் தாங்கள் வாடகைக்கு எடுத்ததாகவும், சுரேஸ்குமார் இலங்கைத் தமிழர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களை நாட்டுக்கு குண்டு தயாரிக்கும் பொருட்களுடன் அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் தாம்பரத்தில் உள்ள நீதவான் நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த சம்பவத்தில் உள்ள ஒரு உட்சதியின் நோக்கம் வெளிப்படுத்துவது, இந்த விடயத்தில் தேவிகனின் தலையீடு இருப்பதை. அவர் இந்த குழுவுக்கு பின்துணை வழங்கியதுடன் ஐரோப்பாவிலிருந்து சுரேஸ்குமாருக்கு நேரடியாக பணம் அனுப்பி உள்ளார். சுரேஸ்குமாருடன் தொடர்பு கொள்ளும்போது அவர் நவநீதன் எனும் பெயரை பயன்படுத்தியுள்ளார்.

தேவிகன் நல்லதம்பி தெருவில் உள்ள வீட்டில் உறங்குவது வழக்கமாக இருந்தபோதும் கியு பிரிவினரின் சோதனை இடம்பெற்ற சமயத்தில் அவர் பம்மலில் இருக்கவில்லை. அந்தக் கைதுகளைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே, பாதுகாப்புக் கருதி அவர் தமிழ்நாட்டை விட்டு வேறு மாநிலத்துக்கு நகர்ந்து விட்டார்.

பாதுகாப்பு புலனாய்வாளர்கள், இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈக்கு புத்துயிர் அளிக்கும் இரண்டு வெவ்வேறு முயற்சிகளில் தமிழ்நாட்டுத் தொடர்பு பற்றிய விபரங்களை கண்டறிந்தபோதும், இந்த எல்.ரீ.ரீ.ஈ புத்துயிர்ப்பு முயற்சிகளில் இந்திய வெளியக உளவுத்துறை முகவர்களான, "றோ"வுக்கும் பங்கிருக்குமோ என்கிற எண்ணம் தோன்றியிருந்தது. இலங்கை பத்திரிகைகளில் வெளியான செய்திகளில், றோவின் ஆசியுடன் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான புலிகளுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக பிரசுரமாகியிருந்தது. இது மறுக்கப்பட்டது. இலங்கை மற்றும் இந்திய அதிகாரிகளின் தொடர்ச்சியான இடையீடு காரணமாக இந்த விடயத்தில் றோ மீது ஏற்பட்ட குழப்பத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

(தொடரும்)

# உழைப்பு எனும் சுதந்திரம்!

"செய்கிற பணியின் பெருமையெல்லாம் எனக்கு வந்து சேர வேண்டும்" என்கிற மனப்பான்மை தெற்காசிய நாட்டவர்களிடம் அதிகம் இருக்கிறது. குழுவாகச் செய்கிறபோது தனிப்பட்ட முறையில் "எனக்கு எந்த ஆதாயமும் இல்லை" என்று நினைக்கிறார்கள். வெளிநாடுகளிலேயோ எல்லாரும் ஓரளவிற்கு அவர்களுடைய பணியை யாரும் கண்காணிக்காமலேயே செம்மையாகச் செய்துவிடுகிறார்கள். நம்நாட்டில் மந்தமாக வேலை செய்பவர்கள் கூட வெளிநாட்டிற்குச் சென்றால் உயிரைக் கொடுத்துப் பணியாற்றுகிறார்கள். உழைப்பது அங்கு ஒரு பண்பாடாகவும் சுதந்திரமாகவும் இருப்பதால்தான் இது நிகழ்கிறது.




வெளிநாடுகளில் மகனுக்கோ, மகளுக்கோ 17 வயதானால் மேல் படிப்பு படிக்கப் பெற்றோர்கள் பணம் தருவதில்லை. அவர்களாகவே படிப்புக்கான செலவை உதவித் தொகையின் மூலமாகவோ, உழைப்பின் மூலமாகவோ ஈட்டிக் கொள்ள வேண்டும். மிகச் சிறப்பாகப் படிக்கிற மாணவர்களுக்கு மட்டுமே படிப்பதற்கான நிதியுதவி அளிக்கப்படும். மற்றவர்கள் எங்கேனும் ஓரிடத்தில் பணியாற்ற வேண்டும். அதில் கிடைக்கிற சம்பளத்தில் படிப்பதற்கான செலவையும் புத்தகங்களுக்கான செலவையும் மேற்கொள்ள வேண்டும்.

அங்கே ஒருவர் இரண்டு மணி நேரம் அல்லது நான்கு மணி நேரம் உழைப்பதற்குக் கூட வாய்ப்புகள் இருக்கின்றன. முழு நேர வேலையாட்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உணவு விடுதியில் காலைச் சிற்றுண்டிப் பொருட்களை எடுத்து வைப்பது, உணவுத் தட்டுகளை மேசையின் மீது வைப்பது போன்ற பணிகளை அவர்கள் செய்யலாம். செய்தவுடனேயே சம்பளம் கிடைத்துவிடும். இப்படிப் படிக்கும்போதிருந்தே உடலுழைப்பு செய்யப் பழகிக் கொள்கிற அவர்கள், படித்த பிறகு வேலை வாய்ப்புகள் குறித்துக் கவலைப்படுவதில்லை. படிக்கும்போதே சுதந்திர உணர்வோடு இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் பெற்றோர் கையை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால் நம்நாட்டில் 30 வயது மகனை, அப்பா கையைப் பிடித்துக் கொண்டு அவனுக்காக வேலை கேட்டு அலைவதைப் பார்க்கலாம். இங்கே "உழைப்பு என்பது உங்களுக்கு அளிக்கப்படும் சுதந்திரம்" என்பதை எந்த நிலையிலும் நாம் கற்றுத் தருவதில்லை.

('வியர்வையின் வெகுமதி' நூலில் வெ. இறையன்பு)

# உலகிலேயே மிகப் பெரிய தடுப்பு முகாம் இருக்கும் நாடு!

உலகிலேயே மிகப் பெரிய தடுப்பு முகாம் எந்த நாட்டில் இருக்கிறது தெரியுமா? இஸ்ரேல்! எகிப்தின் சினாய் பாலைவனத்தின் ஊடாக இஸ்ரேலுக்குள் நுழைந்து அகதித் தஞ்சம் கோரும், ஆயிரக் கணக்கான ஆபிரிக்க அகதிகளை தடுத்து வைப்பதற்காக அந்த சிறைச்சாலை கட்டப்பட்டு வருகின்றது. அது கட்டி முடிக்கப்பட்டவுடன், சுமார் 8000 அகதிகளை அடைத்து வைக்கலாம். எரித்திரியா, சூடான் போன்ற நாடுகளில் இருந்து யுத்தம், சர்வாதிகார அடக்குமுறை காரணமாக புலம்பெயரும் அகதிகள், பல்லாயிரம் டொலர்கள் செலவழித்து இஸ்ரேலுக்கு செல்கின்றனர். லிபியாவிலிருந்து இத்தாலி செல்லும் கடல் வழிப்பாதை அடைக்கப்பட்டு விட்டதால், வேறு வழியின்றி எகிப்து மூலமாக இஸ்ரேலுக்கு செல்கின்றனர். சினாய் பாலைவனத்தில் சட்டவிரோதமாக எல்லை கடக்க உதவும், எகிப்திய பெதூயின் கடத்தல்காரர்கள், அதிக பணம் கறப்பதற்காக பல்வேறு நெருக்கடிகளை கொடுக்கின்றனர். அடித்து துன்புறுத்தப் படுத்தல், பாலியல் பலாத்காரம் போன்ற இன்னல்களைக் கடந்து இஸ்ரேல் வந்து சேர்ந்தாலும், அங்கே அகதியாக ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. சட்டப்படி வேலை செய்ய முடியாது. மருத்துவ உதவியும் கிடைக்காது. இன்றைய இஸ்ரேலில், ஆபிரிக்க அகதிகள் படும் அவலம், ஐரோப்பாவில் யூதர்கள் பட்ட அவலத்திற்கு சற்றிலும் குறைந்ததல்ல.

(நன்றி: இணையம்)

# கமல்ஹாஸன் பதில்கள்!



**கேள்வி:** உங்கள் கவிதைகள் சிலது வாசித்தேன். சுவாரசியம். தொடர்ந்து எழுதலாமே?

**கமல்:** தொடர்ந்து எழுதினால் விரல் வலிக்குமே?

**கேள்வி:** அக்பருக்கு பீர்பால்... கிருஷ்ண தேவராயருக்கு தெனாலிராமன். கமல்ஹாசனுக்கு..?

மனசாட்சி!

**கேள்வி:** ஒரு நடிகனின் தனிப்பட்ட வாழ்க்கையை எழுத அவனுடைய அந்தரங்கத்தை அறிந்துகொள்ள ஏன் பத்திரிகைகள் (உலகமெங்கும்) ஆவல்கொள்கின்றன? அதைவிட, அவற்றைப் படிக்க வாசகன் ஏன் பெரிதும் ஆர்வம்கொள்கிறான் என்று நினைக்கிறீர்கள்? ஒரு நடிகனாக உங்களை மிகவும் பாதித்த... உங்களைப்பற்றிய செய்தி என்று எதைச் சொல்வீர்கள்?

**கமல்:** அது திரைச் சீலையாக இருந்தாலும், வெறுஞ்சீலையாக இருந்தாலும் விலக்கிப் பார்க்கும் ஆதார குணம் உள்ளவர் அதிகம் இருப்பதும் ஒரு காரணம்.

ஒரு திருடன் பிடிபடும்போது, பிடிபடாத திருடன் பரிகசிப்பதுபோன்ற குண்ாதிசயமும் காரணம்.

நீங்கள் கேட்ட கேள்வியும் அந்தரங்கம் ஆராயும் ஒரு கேள்விதான். நானா நேரடி பதில் சொல்வேன்?

**கேள்வி:** திருமணத்துக்குப் பிறகுதான் நாம் திருமணம் செய்துகொள்ள வேண்டிய பெண்ணைச் சந்திக்கிறோம் என்பது சரியா?

**கமல்:** இந்த வம்புனாலதான், நான் இனி மணம் முடிப்பதாக இல்லை - போதுமா?

**கேள்வி:** "உலக நாயகன்" என்று உங்களை அழைக்கும்போது நீங்கள் அடைவது ஆனந்தமா, பரவசமா, கர்வமா, அருவருப்பா, கூச்சமா அல்லது அவமானமா?

**கமல்:** உலகளவு புரிந்த யாருக்கும் கூச்சம்தான். ஆனால், ஒருவகையில் நாம் எல்லோருமே உலக நாயகர்கள்தான். அவரவர் உலகுக்கு அவரே நாயகர்!

**கேள்வி:** உங்கள் ரசிகர்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைப் பார்த்து, அவர்களும் பின்பற்ற மாட்டார்களா?

**கமல்:** காந்தி, கோட்ஸே, ஹிட்லர், புத்தர், இயேசு போன்றோரைப் பார்த்துக் கற்காத அவர்களின் ரசிகர்கள் போல்தான் என் ரசிகர்களும். நல்லது கெட்டது தெரிந்தவர்கள்!

**கேள்வி:** தற்போது தமிழ் சினிமாவில் உங்களுக்குப் பிடித்த நகைச்சுவை நடிகர்?

**கமல்:** எப்போதும் நாகேஷ். அதற்குப் பிறகுதான் நாங்கள் எல்லோரும்!

**கேள்வி:** பழம்பெரும் திறமையான நடிகர் நடிகைகளுடன் (காகா ராதாகிருஷ்ணன், எஸ். வரலட்சுமி) சேர்ந்து நடித்தவர் நீங்கள். ஆனால், ஏன் மறைந்த கலைத் திறன் மிகுந்த நடிகர் ரகுவரனுடன் இணைந்து நடிக்கவில்லை? தனிப்பட்ட காரணம் ஏதேனும் இருந்தால், மறுக்காமல் பதில் கூறவும்!

**கமல்:** இன்னும் நேரம் இருக்கிறது. பாத்திரம் கூடி வரும்போது செய்யலாம் என்று எண்ணித் தவறவிட்டது தவிர, வேறு காரணம் இல்லை!

**கேள்வி:** எப்போதும் உங்களைச் சுற்றி வதந்திகளும் செய்திகளும் வந்துகொண்டே இருந்தன. கேள்விகள் உங்களைத் துரத்திக்கொண்டே இருந்த காலம் ஒன்று இருந்தது. இப்போது எல்லோரும் அமைதியான முறையில் உங்களை எதிர்கொள்வதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**கமல்:** எம்மில் யாரோ ஒருவருக்குப் பக்குவம் வந்துவிட்டதாகச் சந்தேகிப்பேன்!

**கேள்வி:** உங்கள் படங்களில் புற்று நோய் வந்ததாக ஒரு பாத்திரம் வந்துகொண்டே இருக்கிறது. நண்பர்களின் பாதிப்பா? (மகேஷ், ஸ்ரீவித்யா, கௌதமி.)

**கமல்:** இருக்கலாம்!

**கேள்வி:** சமீப காலமாக நிறையப் புதிய இயக்குநர்கள், நல்ல கதை அம்சம் உள்ள அதே சமயம், வியாபாரரீதியாக நன்றாக வசூலாகக்கூடிய படங்களைக் கொடுத்து வருகிறார்கள். அவர்களின் படங்களில் நடிக்காமல், சீனியர் இயக்குநர்களின் படங்களிலேயே ஏன் நடிக்கிறீர்கள்?

**கமல்:** நடிக்கவைக்கிறார்கள், வியாபாரம் தெரிந்தவர்கள். இன்னும் சில வருடங்கள் கடந்தால், எனக்கும் சீனியரான இயக்குநர்கள் கிடைப்பது கடினம் என்ற ஒரு காரணமும்கூட!

**கேள்வி:** "சிவாஜி கணேசன் ஓவர் ஆக்டிங் செய்பவர்" என்ற அவர் மீதான விமர்சனம்பற்றி உங்கள் கருத்து?

**கமல்:** ரசிகர்களின் ரசனைக்கு ஏற்ப நடித்ததால்தான் அவர் நடிகர் திலகமானார். ஒருவேளை, அந்தக் காலத்து ரசனை கொஞ்சம் ஓவரோ என்னவோ!

**கேள்வி:** ஒரு மனிதனின் பலம் பலவீனமாவது எப்போது?

**கமல்:** "சரிவில் யானை" ஓர் உதாரணம். நமக்குச் சரிவுகள் பல உண்டு. பீடுநடை எல்லாம் அக்கம் பக்கம் பார்த்துத்தான் போட வேண்டும்!

**கேள்வி:** உண்மையைச் சொல்லுங்க கமல், நீங்க நல்லவரா... கெட்டவரா? ("தெரியலப்பா"னு சொல்லக் கூடாது!)

**கமல்:** எல்லோரையும் மாதிரி ரெண்டும்தான்!

**கேள்வி:** நீங்கள் சிறந்த நடிகர் என்பது எல்லோருக்கும் தெரியும். உங்களைச் சிறந்த நடிகராக நீங்கள் உணர்ந்த தருணம் எது?

**கமல்:** இன்னும் உணரவில்லை. நான் வெறும் வதந்திகளை நம்புவது இல்லை!

**கேள்வி:** உங்கள் வாழ்க்கையில் நடந்த எந்தச் சம்பவத்தை நினைத்தால், அடக்க முடியாத சிரிப்பு வரும்?

**கமல்:** பத்துப் பதினைந்து நிகழ்வுகள் இருக்கின்றன. நான் நடிகனானது உட்பட!

**கேள்வி:** தொண்டன், பக்தன், ரசிகன் யார் முதல் ஏமாளி?

**கமல்:** ரசிகன் ஏமாறத் தேவை இல்லை... ரசனையை மேம்படுத்திக்கொள்ளும் வரை!

**கேள்வி:** தமிழ்ப் பட உலகத்தைப் பிடித்து ஆட்டுகிற நோய் என்ன... அதைப் போக்குவது எப்படி?

**கமல்:** ரசனைக் குறைவுதான். அதைப் போக்குகிறேன் பேர்வழி என்று ரசிகர்களையே தொலைத்துவிடக் கூடாதே என்ற பயமும் உண்டு. பயம்கூட ஒரு வகை நோய்தான்!

**கேள்வி:** சினிமாவால் நீங்கள் பெற்றது என்ன... இழந்தது என்ன?

**கமல்:** பெற்றது உம்மை. இழந்தது (கொஞ்சம்) என்னை.

**கேள்வி:** தங்களின் கவிதைத் தொகுப்பு எப்போது வெளிவரும்? அதில் இடம் பெறவிருக்கும் ஒரே ஒரு கவிதை சொல்லுங்களேன்...!

**கமல்:** "ஞானமெனும் பெருஞ்சிங்கம்
எறும்புகளை உண்பதில்லை
இறந்த பின், சிங்கத்தை
எறும்புகள் உண்பதுண்டு!"

**கேள்வி:** நீங்கள் நடிக்காத படங்களில் பிடித்த படம்... சந்திக்காத நபர்களில் பிடித்த நபர்... உங்களை இயக்காத இயக்குநர்களில் பிடிக்காதவர்..?

**கமல்:** நான் நடிக்க வாய்ப்பு இல்லாமல் போன பல நூறு படங்களின் பட்டியல் கைவசம்.

சந்திக்காத நபர்களில் காந்தி, பாரதியார் உள்ளிட்ட பெரிய பட்டியலில் நடிகர் திரு ரங்கா ராவும் அடக்கம்.

என்னை இயக்க மறந்த பல நல்ல இயக்குநர்கள் உள்ளனர். அந்தக் காரணத்துக்காகவே அவர்கள் அனைவரையும் பிடிக்காது!

**கேள்வி:** நீங்கள் ஒரு சிறந்த நடிகர், நல்ல சமூக அக்கறையாளர், உண்மையான பகுத்தறிவுவாதி, இதில் எதிர்கால சமுதாயம் உங்களை எப்படி நினைவுகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

**கமல்:** சமூக அக்கறைதான் என்னைப் பகுத்தறிவுவாதி ஆக்குகிறது. எதிர்காலத்துக்கு என்னைப்பற்றி நினைவுகொள்ள நேரம் இருந்தால், சமூக அக்கறைகொண்ட பலரில் ஒருவனாக, தனிப் பெயர் இல்லாத கூட்டமாக நினைத்தால்கூடப் போதுமானது!

**நன்றி: விகடன் மேடை**

# வாசிப்பின் சுவை காட்டுவோம்!

குட்டி சுட்டி, சுட்டி கேசரி என்று இரண்டு சிறுவர் சஞ்சிகைகள் இப்போது இலங்கையில் வெளியாகத் தொடங்கியுள்ளன. குட்டி சுட்டி ஏரிக்கரைப் பத்திரிகை (தினகரன்) வெளியீடு. சுட்டி கேசரி (Express Newspapers வீரகேசரி) வெளியீடு. இரண்டுமே மிகத் தரமாக இருக்கின்றன.

இன்றைய குழந்தைகள், சிறுவர்கள் படிப்பதற்குகந்த இத்தகைய சஞ்சிகைகளை எமது பத்திரிகை நிறுவனங்கள் வெளியிடத் தொடங்கியிருக்கின்றமை மிக்க மகிழ்ச்சியான விடயம்.

குட்டி சுட்டி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வியின் ஆரம்பக் கட்டத்தில் (1ஆம், 2ஆம் வகுப்பு) மாணவர்களுக்கு உகந்ததாக உள்ளது.

சுட்டி கேசரி ஆரம்பக் கல்வியின் பிற்பகுதியில் (3ஆம், 4ஆம், 5ஆம் வகுப்பு) மாணவர்களுக்கு உகந்ததாக உள்ளது.

உடனேயே எனது 9 வயது (4ஆம் வகுப்பு), 5 வயது(1ஆம் வகுப்பு) குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்தேன். மிகவும் ஆர்வமாக அவற்றைப் படிக்கின்றனர்.

இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கு உகந்ததாக ஏற்கனவே விஜயா நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடாக விஜய் வெளிவருகிறது.




இத்தகைய வெளியீடுகளை எமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து வாசிப்பின் சுவையைப் பழக்கினோமாயின் அவர்களது தமிழறிவும், பொது அறிவும், கற்பனா சக்தி, படைப்பாற்றல் என்பனவும் மேம்படும்.

வெறுமனே பயிற்சிப் புத்தகங்களை மாத்திரமே வாங்கிக் கொடுத்து பிள்ளைகளைப் பரீட்சைகளுக்காக மாத்திரம் தயார்ப்படுத்தாமல் அவர்களது வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த பெற்றோர் முன்வரவேண்டும்.

80களில் இலங்கையில், இந்தியாவிலிருந்து வெளியான ரத்னபாலா, அம்புலிமாமா, கோகுலம், பூந்தளிர் போன்ற சிறுவர் சஞ்சிகைகளையும், முத்து காமிக்ஸ், ராணி காமிக்ஸ் போன்ற சித்திரக் கதைப் புத்தகங்களையும் நிறையவே வாங்கிப் படித்தோம். இதற்கு மேலாக முல்லை தங்கராசன் கதைகள் என்று சிறிய அளவில் முகப்பைத் தவிர வேறு படங்கள் எதுவுமின்றி வெளியான 16 பக்க கதைப்புத்தகங்களையும் நிறைய வாங்கிப் படித்தோம்.

இப்படியெல்லாம் இப்போது நமது குழந்தைகளுக்கு இல்லையே என்ற கவலையை "குட்டி சுட்டி"யும், "சுட்டி கேசரி"யும், "விஜய்" உம் போக்கியுள்ளன.

கூடவே, இந்தியாவிலிருந்து வெளியாகும் கோகுலம் இப்போதும் யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

எங்கே எங்கள் பெற்றோரே.... இவற்றை வாங்கிக் கொடுத்து உங்கள் பிள்ளைகளை, எங்கள் எதிர்கால சந்ததியை வளம்படுத்துவோமா...?

– கோ.றுஷாங்கன்




# உலகப் பெரும் நூலகங்கள் 10

## பிரிட்டிஷ் நூலகம்



சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரின் அறிவுத் தேடலுக்கும் பயன்படுபவை நூலகங்கள். கிராமங்கள், நகரங்களுக்கேற்ப நூலக அமைப்பும் நூல்களின் எண்ணிக்கையும் இருக்கும். உலக அளவில் மிகப் பெரிய அளவில் திகழ்ந்து அறிவுப் பசிக்கு விருந்தளித்து வரும் நூலகங்களைத் தெரிந்துகொள்வோம்.

1753 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இலண்டனில் (பிரிட்டன்) உள்ளது. நூல்கள், பிறமொழி நூல் கள், கையெழுத்துப் பிரதிகள், மாத, வார, நாளேடுகள், இசை வெளியீடுகள் என 15 கோடியே 10 இலட் சத்திற்கும் மேற்பட்ட தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன.


## நியூயோர்க் நூலகம்



1895 இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரத் தில் நிறுவப்பட்டது. இங்கு சுமார் 5 கோடியே 31 இலட சம் நூல்கள் இடம் பெற்றுள்ளன.

## லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்

அமெரிக்கக் காங்கிரசால் 1800 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நூலகம் வோஷிங்டனில் உள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் தேசிய நூலகமாகத் திகழும் இதில் சுமார் 15 கோடிக்கும் அதிகமான தொகுப்புகள் உள்ளன.



## ரஷ்யன் ஸ்டேட் நூலகம்

1862ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த நூலகம் ரஷ்யாவின் மாஸ்கோவில் உள்ளது. 247 மொழிகளில் புத்தகங்கள் இடம் பெற்றிருப்பது இந்நூலகத் தின் சிறப்பாகும். சுமார் 4 கோடியே 44 இலட்சம் நூல்களைக் கொண்டுள்ளதுடன் இசை மற்றும் பல வசதிகளையும் பெற்றுத்திகழ்கிறது.



# சீனா விசன் 2050




கண்டுபிடிப்புக்களுக் குப் பெயர் பெற்ற சீனக் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காகக் கொண்டு வந்துள்ள திட்டமே சீனா விசன் 2050 என்ற தொலை நோக்குத் திட்டம்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி யாக 2010 ஆம் ஆண்டிலிருந்து பிறந்த குழந்தைகளை ஆரோக்கி யத்தில், கல்வியில் சிறந்தவர் களாக வளர்க்க நுணுக்கமான ஆய்வுகளை மேற்கொண்டு வரு கிறது.

அதில் ஒன்று, குழந்தைகள் சரியான தூரத்தில் வைத்துப் படிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள கருவி. இந்தக் கருவியின் உதவியு டன் படிக்கும் குழந்தைகளுக்கு கண் பார்வை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படாதாம்.

இப்படிப் படிக்கும் குழந்தைகள் 20 வயதினை அடையும்போது கண்பார்வைக் குறைபாடு இல்லாத இளைய சமுதாயத்தைச் சீனா பெற்றிருக்கும். வருங்கால சந்ததியினரை மனதில் வைத்து, இதுபோன்ற பல திட்டங்களைச் சீனா செயறபடுத்த உள்ளது.

# வைபர் கண்டுபிடித்த பெண்மணி



கார் என்ற வாகனத்தில் செல லாதவர்களை விரல்விட்டு எண்ணக் கூடிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காரில் செல்லும்போது திடீரென மழை வநதுவிட்டால் முன் உள்ள கண் ணாடியில் பட்ட மழைத்துளி களை அங்கும் இங்கும் அசைந்து துடைக்கும் வின்ட்ஷல்டு வைவரைக் (Windshield Wiper) பார்த்திருப்போம்.

வின்டில்டு வைப்பரைக் கண்டுபிடித்தவர் மேரி ஆண் டர்சன் (Mary Anderson) என்ற பெண் ஆவார். 1866 ஆம் ஆணடு அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் பிறந்த மேரி சிறு வயதிலேயே தாய் மற்றும் சகோ தரிகளுடன் பிர்மிங்ஹாம் என்ற நகரத்திற்குச் சென்றுள்ளார். கட்டுமானத் துறையின்மீது இருந்த ஆர்வத்தால் கட்டு மானப் பொறியியலாளர் ஆனார்.

தனது நண்பரைச் சந்திக்க நியூயோர்க் சென்றபோது அங்கி ருந்த டிராலி வண்டியில் பயணம் செய்தார். அப்போது பனிப் பொழிவு அதிகம் இருக்கவே முன்பக்கக் கண்ணாடியைத் திறந்து வைத்தபடியே கார் ஓட்டி வந்துள்ளார் ஓட்டுநர். இது குறித்து ஓட்டுநரிடம் கேட்டபோது, கண்ணாடியில் பனி பொழியும் போது அதனைச் சுத்தம் செய் வது கடினம் என்று ஓட்டுநர் கூறியுள்ளார்.

அலபாமா நகரத்திற்கு வந்த பிறகும் பனியைத் துடைக்கும் கருவி வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணமே அவரது மனதில் மேலோங்கி நின்றது. நீளமான கட்டையை எடுத்து, அதன் அடிப் பகுதியில் கடினமான ரப்பர் ஒன்றை இணைத்து, அந்தக் கட்டையினைக் கையினால் இயங் கும் முறையில் அமைத்தார்.

கார் அல்லது டிராலி ஓட்டு நர்கள் தங்களின் கையினால் அசைக்கக்கூடிய வகையில் வாகனத்திற்குள் பொருத்தி னார். பின்னர், தமது நண்பர் களின் கார்களில் பொருத்திப் பார்த்து அது நன்கு வேலை செய்வதைப் பார்த்து மகிழ்ந் தார். கண்ணாடித் துடைப்பானுக் குக் காப்புரிமை கோரினார். 17 ஆண்டுகளுக்குக் காப்புரிமை கிடைத்தது.

கனடா நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனத்திடம் தனது கண்டுபிடிப்பைக் காட்டிய போது நிராகரிக்கப்பட்டது. கார ணம் கேட்டபோது, கண்ணாடித் துடைப்பானுக்கு வியாபாரரீதி யாக எந்தப் பலனும் இல்லை என்று நிறுவனம் பதில் கொடுத்தது.

1920 ஆம் ஆண்டு காப்பு ரிமை முடிவடைந்த நிலையில் கார்களின் விற்பனை அதிக மாகத் தொடங்கியது. 1922 ஆம் ஆண்டு காடிலாக் கார் உற்பத்தி நிறுவனம் கண்ணாடித் துடைப் பானை காரின் முக்கியமான அங்கமாக நினைத்தது. பின்னர், அனைத்து உற்பத்தியாளர்களா லும் வடிவமைக்கப்பட்டது. இனறு எத்தனையோ விதவிதமான துடைப்பான்கள் வந்துள்ளபோதி லும் இதற்கெல்லாம் மேரி ஆண டெர்சன் முயற்சியும் வெற்றி யுமே அடிப்படையாகும்.

# கடமை



காட்டுக்கு வேட்டையாட வந்திருந்த தன் எஜமானனுக் காக புதரில் மறைந்திருந்த ஒரு முயலை விரட்டு, விரட்டு என்று விரட்டிற்று ஒரு நாய்.

ஓடி ஓடிக் களைத்த முயல் மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க் நினறு, அட, இனத் துரோகி! என்னைப் போல நீயும் ஒரு மிருகம், உன்னைப் போல் நானும் ஒரு மிருகம். கேவலம், ஒரு சில எலும்புக ளுக்காக எனனை நீ இப்படிக் காட்டிக் கொடுக்கலாமா? என்று கேட் டது.

காட்டிக்கொடுத்தால் இனத் துரோகி காட்டிக் கொடுக்காவிட் டால் எஜமானத் துரோகி. இதில் எது தருமம் எது அதருமம்? என்று நீதான் சொல்லேன்! என்று அதைத் திருப்பிக் கேட்டது நாய்.

முயல் விழிக்க, அந்தக் கவலை உங்களுக்கு வேண் டாம். நீங்கள் உங்களுடைய கடமையைச் செய்யுங்கள். பலனை எதிர்பார்க்காதீர்கள்! என்றது ஒரு கழுகு, அங்கி ருந்த ஒரு மரக்கிளையில் அமர்ந்தபடி. சரி இப்போது ஓடு வதுதான் என் கடமை! என்று சொல்லிக் கொண்டே முயல்



ஓடிற்று.



என் கடமை உன்னைத் துரத்து வதுதான்! என்று சொல்லிக் கொண்டே அதைத் துரத்திற்று நாய். டுமீர்! என்று ஒரு சத்தம். சுருண்டு விழுந்த முயலைப் பாய்நது வந்த கழுகு தன் காலால் இறுகப் பற்றிக் கொண்டு மேலே பறந்தது

இதைக் கண்டதும் ஒரு கணம் திடுக்கிட்டு நின்ற நாய், மறுகணம் தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு சொல லிற்று. இது பலனை எதிர்பாரா மல் செய்யும் கழுகின் கடமை போலும்!

# வழங்கப்பட்ட கடனை அறவிட இரவில் வீட்டிற்கு வரும் ஊழியர்கள்

## பொலிஸில் பெண்கள் முறைப்பாடு

(மன்னார்)

மன்னார் நகரில் இயங்கும் சில நிதி நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் சிலர் கடனை அறவிடுவதில் ஒழுங்கற்ற முறையை பின்பற்றுவது குறித்து பொதுமக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மன்னார் நகரில் பல நிதி நிறுவனங்கள் இயங்கி வருகின்றது. குறித்த நிதி நிறுவனங்களில் மன்னாரைச் சேர்ந்த பலரும் பெரும் எண்ணிக்கையான பெணகள் கடன்களை பெற்றுள்ளனர்.

இவ்விதம் நிதி நிறுவனங்கள் மூலம் கடன்களை பெற்றவர்களிடமிருந்து பணத்தினை அறவிடுவதற்கு அவர்களின் வீடுகளுக்குச் செல்லும் சில ஆண் ஊழியர்கள் கடன் பெற்ற குறித்த பெண்களை தகாத வார்த்தைகளினால் ஏசுவதாகவும், மரியாதை குறைவாக நடத்துவதாகவும், இரவு 9 மணி கடந்த நிலையில் குறித்த வீடுகளுக்குச் செல்லும் இவர்கள் அங்குள்ள ஏனைய குடும்ப உறுப்பினர்களையும் நிந்திப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கடன் பெற்ற பெண்களை குறித்த கடன் அறவிடும் சில பணியாளரகள் தாக்க முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சில பெண்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் மன்னார் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கலட்டி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு



(கரணவாய்)

கரணவாய் கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவும் பொதுக்கூட்டமும் அண்மையில் நிலையத்தலைவர் சி.ஜி. திருமாளழகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தலைவர் கொ.குணசிங்கம், செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களில் தலைவராக தி. திருமாளழகன், செயலாளராக எஸ்.கங்காதரன், பொருளாளராக சி. கிருஷ்ணதாஸன், உபதலைவராக ஆர்.கருணாகரன் உபசெயலாளராக எம்.நிறோசன், போசகர்களாக நவரத்தினம், எஸ்.சற்குணம் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 7 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (18)

# மகோற்சவம்

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 1030 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திரு விழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி 10.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. (104)

# தெல்லிப்பளை கோட்ட மட்ட தமிழ்த்தின போட்டி முடிவுகள்

தெல்லிப்பளை கோட்டமட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர் விபரம் வருமாறு,

நடனம் தனி பிரிவு II

ப.சயந்தர்சினி- (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), செ.சானுஜா (யா/யூனியன் கல்லூரி), ச.கலைமதி (யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்),

பிரிவு III

ம.துஷாரா- (யா/மகாஜனாக்கல்லூரி), பா.வேணுமிதா (யா/யூனியன் கல்லூரி), ஜெ.அபினா (யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்),

பிரிவு IV

ந.உமாதேவி (யா/மகாஜனக்கல்லூரி), பா.மயூரா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்),

பிரிவு V

அ.லிஷா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்),சோபிதா(யா/யூனியன் கல்லூரி)

நடனம்குழு பிரிவு 1

03 (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்),03(யா/மகாஜனாக்கல்லூரி),03(யா/யூனியன் கல்லூரி)

இசை தனி பிரிவு II

பி.பிரகாஷ் (யா/மல்லாகம் மகா வித்தியாலயம்), க.வித்தகன் (யா/மகாஜனாக்கல்லூரி), அலெக்ஸ் ஸ்ரனிஸ்ரன்(யா/யூனியன் கல்லூரி),

பிரிவு III

அ.கிரிஷாந் (யா/யூனியன் கல்லூரி), க.சயிதா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), கி.கேதுஷா(யா/அருணோதயாக்கல்லூரி),

பிரிவு IV

நிறோஜா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஷகானா(யா/மகாஜனாக்கல்லூரி), நிலக்ஷனா(யா/குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை),

பிரிவு V

தி.ஜிவிதா(யா/மகாஜனாக்கல்லூரி), ச.சகிலா (யா/,இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), (17) (தொடரும்)

# குருநகர் தொடர்மாடி குடியிருப்பு வீதிப் புனரமைப்பு துரிதம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடிக்குடியிருப்பினை சூழவுள்ள சுமார் 500 மீற்றர் நீளமானவீதி புனரமைப்புப்பணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பலனாக யாழ். மாநகரசபை உறுப்பினர் றீகனின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதிஒதுக்கீட்டில் இந்தப்பகுதிக்கான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.



கடந்த யுத்த கால சூழலினால் சேதங்களுக்குள்ளாகியிருந்த இந்த குருநகர் தொடர்மாடிக்குடியிருப்பு தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் புனரமைக்கப்பட்டிருப்பதனை அடுத்து இதற்கான வீதியும் தற்சமயம் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் முயற்சியினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# பதிவிறக்கப் பெட்டகம்

பெர்னாட்ஷோ, ஒழுக்கமாக வாழ்ந்தவர். மது அருந்தாமல் இருந்ததோடு மதுவை வெறுத்தவர்.

"நீங்கள் ஏன் மது அருந்துவதில்லை?" என்று நண்பர் ஒருவர் கேட்டபோது, "என் குடும்பத்திலிருந்த முன்னோர், என் பங்கையும் சேர்த்துத் தாங்களே குடித்துவிட்டார்கள். எனவே எனக்கு பங்கு இல்லாமல் போய்விட்டது..." என்று குறிப்பிட்டார்.

பெர்னார்ட்ஷோ போலிகளைச் சாடினார். உண்மைகளை வாழ்த்தினார். "இன்று சிறையில் அகப்பட்டுக் கிடக்கும் திருடன், மற்றவர்களைவிட நேர்மையற்றவன் என்று சொல்லமுடியாது. அறியாமையில் சமுதாய வழக்கத்திற்குப் பொருந்தாத வழியில் திருடியவனே பெரும்பாலும் திருடனாகக் கருதப்படுகிறான். அவனே சிறைக் கூடத்திற்குச் செல்கிறான். ஆனால் அவனைப் போன்ற மற்றொருவன் சமுதாயத்திற்குப் பொருந்திய முறையைப் பின்பற்றுவதால் பாராளுமன்றத்திற்குச் செல்கிறான்..." என்பது ஷோவின் கருத்து. – முஜீப் ரஹ்மான்

இங்கிலாந்திலிருந்து பாரிசுக்குச் செல்வதற்கு முன்பு ஸ்ட்ராபோல்கி பிரபு எனக்கும் ஊனாவுக்கும் இங்கிலாந்தின் பிரபு சபையில் ஒரு விருந்து கொடுத்தார். என் இருக்கை, ஹெர்பர்ட் மோரிசுக்குப் பக்கத்திலிருந்தது. ஒரு பொதுவுடைமைவாதியாக இருந்தாலும் அணு பாதுகாப்புக் கொள்கைக்கு அவர் ஆதரவளிப்பது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. இங்கிலாந்தின் எதிர்ப்பு முழுமையான நடுநிலையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் என்று நான் வாதிட்டேன். அறிவாளிகளான பலர், அணு ஆயுதங்களுக்கு ஆதரவாகப் பேசுவதைக் கேட்டு நான் வியந்துபோனேன்

– சார்லி சாப்ளின் "என் கதை"யில

அல்கைதா சந்தேகநபர்களை சித்திரவதை செய்த காரணத்தால், கியூபாவில் உள்ள குவாந்தனமோ அமெரிக்கப் படையினரின் முகாம், உலகம் முழுவதும் கெட்ட பெயரை சம்பாதித்திருந்தது. ஒபாமா அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட்ட நேரம், தான் பதவிக்கு வந்தால், ஜனவரி 2010 முன்னர், குவாண்டனமோ தடுப்பு முகாமை மூடி விடுவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

ஒபாமா ஜனாதிபதியான பின்னர், முதல் வருடமே குவாந்தனமோ முகாமை மூடி விடுவார் என்று எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். அதற்காக, சமாதானத்திற்கான நோபல் பரிசும் கிடைத்தது. தற்போது, 2014 ஆம் ஆண்டு நடக்கிறது. குவாந்தனமோ இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒபாமாவின் தேர்தல் கால வாக்குறுதி காற்றோடு பறக்க விடப்பட்டு விட்டது. அவர் இப்போது அதைப் பற்றிய பேச்சே எடுப்பதில்லை. ஆண்டிப்பட்டி முதல் அமெரிக்கா வரை, எல்லா அரசியல்வாதிகளும் ஒரே மாதிரித் தான் நடந்து கொள்கிறார்கள்.


– கலையரசன்.தா

முப்பதாண்டு கால யுத்தமும், அதன் தொடர்ச்சியான விளைவுகளும் ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பை இன்னமும் தம் போர்ப் பிடியில் வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆனாலும் ஏதோ ஒன்று குறைபடுகிறது. பேரழிவைக் கொடுக்கும் யுத்தங்கள் மனித மனங்களை, குறிப்பாக இலக்கிய மனங்களை மாபெரும் மாற்றங்களுக்கு உள்ளாக்குகின்றன. கூட்டுளவியலின் தன்மையைச் சிதிலம் செய்து அதில் புதிய புரட்சிகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் இது ஈழத் தமிழச் சமூகத்தில், ஈழத் தமிழ் இலக்கிய மனத்தில் நடைபெற்றதா? என்னிடம் உறுதியான பதிலில்லை. நாம் மூடுண்டு கிடக்கிறோம். முக்கியமான ஏதோ ஒன்றை நாம் தவறவிட்டுவிட்டோம். அது என்ன என்பதை கண்டுபிடித்தாக வேண்டும்...

மானிடம் துன்பியற்பாதைகளுடே பயணிக்கும் போதெல்லாம் அதன் அகவாழ்வு துல்லியமடைகிறது. இவ்வாறான பயணங்களே மானிடத்தை சிந்தனைத் தளத்திற்கும் வலிந்து அழைத்துச் செல்கின்றன. பேரழிவுகள் எப்போதுமே மனிதர்களை இருப்புப் பற்றிய கேள்விகளால் மூழ்கடிக்கின்றன. யுத்தங்களும், அவற்றின் பேருபாதைகளும் மனிதர்களுக்கு வழங்கும் இருப்பைப் பற்றிய வினாவுதலுக்கான சந்தர்ப்பங்கள் அகவாழ்வை அதன் உச்ச நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழரின் [அவர்கள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும்] அகவாழ்வை அதியுச்ச நிலைக்குக் கொண்டு சென்றதா? மாபெரும் துன்பியலுக்கு முகம் கொடுத்த ஒரு இனம் தன்னளவில் இதுபற்றிப் பெற்றிருக்கும் பிரக்ஞையின் ஆழமென்ன? இடையறாது தமக்குள் சச்சரவு செய்துகொண்டேயிருக்கும் ஒரு குடும்பத்தின் குழந்தைகளா நாம்? 'சிறுபிள்ளை வேளாண்மையில்' வயலையும் பறி கொடுத்து விட்டுப் பரிதவிக்கும் நிலைக்குள் நாம் எவ்வாறு தள்ளப்பட்டோம்? அழிவை வாழ்ந்தவர்களின் உக்கிரங்களின் இலக்கியப் புறந்தள்ளல்கள் எங்கே? எங்கே அவர்கள் கண்டடைந்திருக்க வேண்டிய மொழி? – கவிஞர் வாசுதேவன்

# ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் போராடிய வீரருக்கு சிலை



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இராணுவத்தில் இருந்து போராடிய பொன்னையா முத்தையாவிற்கு வவுனியா, வைரவபுளி யங் குளத்தில் சிலை அமைத்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத தில் ஒரு போர் வீரனாக இருந்து தனது சொந்த மண்ணாகிய வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் விவசாயம் செய்து ஏனைய விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து பல நிவாரண திடடங்களை மேற்கொண்டு மக்கள் சேவையில் இணைந்திருந்தார்.

அதன் பின் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் மக்கள் சேவையில் ஈடுபட்டார். மொழித் தேர்ச்சி மிக்கவராக விளங்கிய இவர் ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்கியவர். அவரின் நினைவாக வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினதும் அமரர் முத்தையாவின் மனைவி, பிள்ளைகளினதும் முயற்சியினால் வைரவபுளியங்குளம் முத்தையா மண்டபத்திற்கு முன்னால் அவரது உருவச் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிலையில், சிலை அமைப்புக்குழுவின் தலைவர் நா.சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர்களான கே.சீ.லோகேஸ்வரன், த.லங்காநேசன், சி.தில்லைநடராஜா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாக ராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.இராவீந்திரநாதன், வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராசா, ஜனாதிபதியின் இணைப்பாளர் சிவநாதன் கிசோர் மற்றும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

## திருடப்பட்ட குத்துவிளக்குகள் பற்றைக்குள்ளிருந்து மீட்பு

யாழ்.சுன்னாகம் ஐயனார் ஆலயத்திலிருந்து கடந்த வாரம் திருடப்பட்ட குத்துவிளக்குகளின ஒரு பகுதி கோவிலின் அருகிலிருந்த தாழம் பற்றைக்குள் இருந்து கண் டெடுக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.


மேற்படி ஆலயத்தில் கடந்த வாரம் இரண்டு தடவைகள் திருட்டு நடவடிக்கைகள் இடம் பெற்றதுடன், அத்திருட்டுக்களின் குத்துவிளக்குகள் உள்ளிட்ட பித்தளைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இந் நிலையில் கடந்த சனிக்கிழமை ஆலயத்திற்கு வந்த அடியவர்கள் ஆலயத்தின் பின்புறத்திலுள்ள பற்றைக்குள் இருந்து களவாடப்பட்ட குத்துவிளக்கின் மேல் மற்றும் அடிப் பகுதிகளையும் கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி ஆலயத்தின் அருகிலுள்ள சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்திலும் இதேமாதிரியான குத்துவிளக்குகள் கடந்த வாரத்தில் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், கோவிலுடன் தொடர்புடையவர்களையும் சந்தேகத்திற்கிடமானவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்து வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கு புதிய தூதுவர்கள் விஜயம்



அரசாங்கத்தினால் வெளிநாடுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்தனர்.

சவுதி அரேபியா, ஆப்கானிஸ்தான் ,பிலிப்பைன்ஸ், சீஸல் ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவினால் நியமிக்கப்பட்ட தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களே இந்த விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கும் விஜயம் செய்தனர். இவர்களை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தூதுக்குழுவினருக்கு மாவட்ட அரசாங்க அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் மேற்கொள்ளப் படவுள்ள செயற்றிட்டங்கள் ,மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

அதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்கள் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டனர்.

## வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(கொழும்பு)

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மன்னார் வீதியால் வந்துகொண்டிருந்த முச்சக்கர வண்டியை பின்னால் வந்த கப் ரக வாகனம் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டியின் சாரதியும் அதில் பயணித்தவரும் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்துத் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெற்றிலைத் தோட்டத்திற்குள் புகுந்தது யானை

### பல இலட்சம் ரூபா நட்டம்

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டக் கண்டல் கிராமத்தினுள் புகுந்த காட்டு யானையொன்று, அங்குள்ள வெற்றிலைத் தோட்டத்தை சேதப்படுத்தியுள்ளது.

இதனால், பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக வெற்றிலைத் தோட்ட உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

வெற்றிலைத் தோட்டத்தினுள் கடந்த வெள்ளிக்கிழமை யானை புகுந்ததைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருடன் இராணுவத்தினர், வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் ஆகியோர் குறித்த இடத்திற்கு வந்தனர். குறித்த தோட்டத்தினுள் புகுந்த யானையை வெளியேற்ற நீண்ட நேரம் அதிகாரிகள் போராடினர். எனினும், யானை தோட்டத்தை விட்டு வெளியில் வரவில்லை.

இதன் பின்னர், பட்டாசுகள் கொழுத்தியே தோட்டத்தை விட்டு யானையை வெளியேற்றியதாகவும் தோட்ட உரிமையாளர் தெரிவித்தார்.



அச்சுவேலி, வளலாய் அ.மி.த.க பாடசாலையானது புனரமைக்கப்படாது பற்றைகள் செடிகளுடன் காணப்படுவதைக் காணலாம். (85)

## வெள்ளியாக மாறிய வெண்கலவேல் செல்வச் சந்நிதி ஆலயத்தில் அதிசயம்

(யாழ்ப்பாணம்)

கதிர்காமத்திற்கான பாத யாத்திரையில் கொண்டு செல்லப்படும் வெண்கலவேல் பூஜைக்காக யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைக்கப்பட்டு காலையில் வெளியில் எடுத்தபோது வெள்ளி வேலாக மாறியிருந்தது.

இவ்வதிசயம் பாதயாத்திரை தொடங்கிய கடந்த சனிக்கிழமையன்று காலை சந்நிதி சந்நிதானத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பாதயாத்திரைத் தலைவர் வேல்சாமி தெரிவிக்கையில்,

நாம் பாதயாத்திரையை இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பிப்பதாக இருந்தோம். சடுதியாக கதிர்காம நிருவாகம் கொடியேற்றம் மற்றும் தீர்த்தத் திகதிகளை அறிவித்ததை எமது கல்வியியலாளர் சகா அவர்கள் என்னிடம் தெரிவித்ததற்கமைவாக உடனடியாக பாதயாத்திரையை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

அதற்காக காரைதீவிலிருந்து கடந்த 15 வருடங்களாக கதிர்காம பாதயாத்திரையில் கொண்டு செல்லப்படும் வழமையான வெண்கல வேலுடன் யாழ்ப்பாணம் வந்தடைந்தேன். அன்றிரவு செல்வச்சந்நிதி ஆலய மூலஸ்தானத்தில் வேலை பூஜைக்காகவும் முருகனின் ஆசிக்காகவும் வழமைப்பிரகாரம் வைத்தோம்.



வைத்துவிட்டு வெளியேறும்போது சந்நிதி ஆலய முன்றலில் வழமையாக இருக்கும் வெள்ளிவேல் இருந்தது. அதைப்பார்த்து இப்படியொரு வேல் இருந்தால் நன்றாக இருக்குமே முருகா அருள்வாயா? என்றெண்ணியபடி தூக்கத்திற்கு போய்விட்டேன். தூக்கத்திலும் முருகனிடம் வெள்ளிவேலிருந்தால் நன்றாக இருக்குமே. எனக்கு அருள்வாயா என்றபடி தூங்கி விட்டேன்.

காலையில் அடியார்கள் எல்லாம் வந்துவிட்டார்கள். பூஜையும் நடந்தது. பூஜை முடிந்ததும் ஆலய குருக்கள் வேலைத் தூக்கி வரும்போது பார்த்தேன். என்னாலேயே நம்பமுடியாமல் போய்விட்டது. நான் காண்பது கனவா நிஜமா? என்று பிரமித்துப்போனேன்.

நான் இரவு பூராக முருகனிடம் கேட்ட வெள்ளி வேலே அது. சந்நிதியானின் அற்புதத்தை நினைந்து சற்றுநேரம் கண்ணீர் மல்க வாயடைத்துநின்றேன். சகலரும் என்ன நடந்தது என்று கேட்டார்கள். ஏனையோரிடம் விடயத்தைச் சொன்னதும் அவர்களும் ஆச்சரியத்தில் உறைந்து போனார்கள்.எமது பாதயாத்திரைக்கான முருகனின் அங்கீகாரமாக இதனைக் கருதுகின்றேன். முருகனின் அருள் சகலருக்கும் கிடைப்பதாக என்றார்.


26) விளையாட்டுத்திடலில் நீளம் பாயும் போது கையுடைந்த ஒருவருக்குச் செய்ய வேண்டிய முதலுதவி
(i) வீட்டுக்குத் தகவலை அனுப்புதல்
(ii) உடினடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல்
(iii) காயப்பட்டவரைச் சுற்றி பாதுகாப்புக்கு நிற்றல்
(iv) முறிந்த கையை அசையாது கட்டுப் போடுதல்


27) 
உருவில் காணப்படுவது.
(i) தலதா மாளிகை
(ii) ஸ்ரீ மகாபோதி வெள்ளரச மரக்கிளை
(iii) நிஸ்ஸங்க லதா மண்டபம்
(iv) ரன் கொத்விகாரை

28) இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாவரம் எது?
(i) வெற்றிலை (ii) அரசு (iii) துளசி (iv) வேம்பு

29) கீழே தரப்பட்ட கலையலங்காரங்களில் பூவும் மொட்டும் எது?
(i)  (ii) 
(iii)  (iv) 

30) காலாவதியான உணவை உண்பதால் ஏற்படக் கூடியது.
(i) அஜீரணம் (ii) வயிற்றோட்டம் (iii) வாந்திபேதி (iv) மேற்கூறியவை அனைத்தும்

31) 
படத்தில் காட்டப்பட்டுள்ள விளையாட்டுச் செயற்பாட்டின் மூலம் உணர்த்தப்படும் பிராணி எது.
(i) புழுனி (ii) தவளை (iii) ஆமை (iv) கங்காரு

32) 
அருகில் தரம் ஐந்து மாணவனால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை தரப்பட்டுள்ளது. இது எதனை அறிய அம்மாணவனால் மேற்கொள்ளப்பட்டது.
(i) சூரிய வெப்பத்தால் நீர் வெப்பமடையும்
(ii) சூரிய ஒளியில் உள்ள ஏழு நிறங்களையும் அறிய
(iii) சூரியனின் வெப்பத்தை அறிய
(iv) சூரிய ஒளியால் நீர் ஆவியாகி மேலே செல்கிறது என்பதை

33) காலை வேளை சூரிய ஒளியின் மூலம் கிடைக்கப்பெறும் விற்றமின் எது?
(i) விற்றமின் A (ii) விற்றமின் D (iii) விற்றமின் C (iv) விற்றமின் B

34) 
பொதி செய்யப்பட்ட பெட்டிகளில் இவ்வாறான அடையாளம் தென்படும் அதன் அர்த்தம்.
(i) நனையாமல் பாதுகாக்கவும் (ii) கவனமாகக் கையாளவும்
(iii) உள்ளே உடையக்கூடிய பொருள் உள்ளது
(iv) சூரிய ஒளி படாமல் பாதுகாக்கவும்

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

01) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

"களவு, கொலைகள், கள்ளது பருகல்
கஞ்சத்தனத்துடன் கீழ்மைக் குணங்கள்
உலகம் மதிக்கா உதவா இவற்றை
ஒதுக்கி, ஒழித்து உயர்வுடன் வாழ்வோம்
வாழும் வாழ்க்கையில் வாய்மை மிளிர
நாளும் பொழுதும் நனி நேர்மைகள் ஒளிர
சாலவும் சிறந்த சாத்திரம் கற்று
ஞாலம் வாழ்ந்து நல் நாமம் பெறுவோம்"

(i) 'கஞ்சத்தனம்' என்பதன் கருத்தைத் தரும் வேறு ஒரு சொல் தருக.
(ii) "வாய்மை" என்பதற்குரிய வேறு ஒத்த கருத்துச் சொல் தருக.
(iii) 'பெறுவோம்' என்பதை இறந்தகாலத்தில் மாற்றி எழுதுக.
(iv) 'கீழ்மை' என்பதன் எதிர்பொருள் எழுதுக.
(v) 'இவற்றை' என்பதை ஒருமையில் மாற்றி எழுதுக.
(vi) கொலை, களவு, கள் பருகல், பொய், குருநிந்தை போன்ற கொடிய பாவங்களை ஒரு சொல்லில் தருக.

02) கீழே உள்ள வசனங்கள் சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.
(i) அலுமாரியில் எனது ஆடைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. ( )
(ii) மரத்தில் இரண்டு பறவைகள் உண்டு. ( )
(iii) ஒவ்வொரு திருக்குறளிலும் அர்த்தமுள்ளது. ( )
(iv) வெள்ளத்தால் அனைத்து கிராமங்களும் பாதிக்கப்பட்டன. ( )

* கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

03) வீட்டு ---------------- யில் (வலை / வளை) இருந்த எலி நுளம்பு வலையை
04) அறுக்க வந்த வேளை பூனையின் ஒலி 04) கேட்டு ஓடி ---------------------- (ஒலிந்தது / ஒளிந்தது)

* சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

05) காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு என்ற பழமொழியின் கருத்து யாது?

06) வெறும் புத்தகப்படிப்பு என்ற கருத்தைத் தரும் பழமொழி யாது?

07) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
(i) உப்பில்லாப் பேச்சு ---------------------
(ii) தட்டிக் கொடுத்தல் ---------------------

08) கீழே உள்ள ஆங்கில எழுத்துக்களை ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் ஆங்கிலச் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) | a | n | d | m | y | o | ..........................

(ii) | y | r | a | f | d | i | ..........................

09) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் எழுதுக.

வைத்தியசாலை எங்கே இருக்கிறது? ..........................

10) கருத்தை தமிழில் எழுதுக.

(i) I can play ..........................
(ii) Who are you? ..........................
(iii) Where are you? ..........................

11) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

ஆசிரியர் கற்பிக்கிறார் ..........................

12) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(i) கிரவா கொல பாட்டாய் ..........................
(ii) பொஹொம ஹொந்தாய் ..........................

13) பின்வரும் பூக்களுள் காலையில் மலரும் பூ எது.

(i) செம்பருத்தி (ii) முல்லை
(iii) குண்டுமல்லிகை (iv) இருவாட்சி

14) பின்வரும் பிராணிகளில் ஐந்தூரியம் பூவில் தேன்குடிக்க வரும் பிராணி எது.

(i) வௌவால் (ii) நத்தை
(iii) பச்சிலைப்பூச்சி (iv) அணில்

15) பின்வருவனவற்றுள் மருந்துக்காக பயன்படும் இலைக் கூட்டம் எது?

(i) வேம்பு, துளசி, கற்றாளை, கீழ்காய் நெல்லி
(ii) குறிஞ்சா, பூசணி, வேம்பு, கற்பூர வள்ளி
(iii) புளி, வாகை, அகத்தி, ஆனைத்தகரை
(iv) தேயிலை, பசளி, சலாது, கங்குன்

16) பின்வரும் பிராணிகளில் அனைத்துமுண்ணி அல்லாதது.

(i) காகம் (ii) நரி (iii) மனிதன் (iv) கோழி

17) கீழே தரப்பட்ட தொலைக்காட்சிக் குறியீட்டில் அரச தொலைக்காட்சி குறியீடு எதுவெனக் காண்க.

(i) (ii) (iii) (iv)



18) தாம்பு தாண்டற் கயிற்றைப் பயன்படுத்தும் விளையாட்டு எது.

(i) நீளம் பாய்தல் (ii) கயிறடித்தல்
(iii) உயரம் பாய்தல் (iv) தடை தாண்டி ஓடல்

19) அருகில் தரப்பட்ட தாவரத்தின் பெயர் என்ன?



(i) இருவேரி
(ii) கண்டங்கத்தரி
(iii) பசளி
(iv) ஏகாவேரி

20) மாணவர்களுக்கு ஆசிரியர் காயம் ஏற்படக் கூடியவாறு தண்டனை வழங்கினால் (சிறுவர் துஸ்பிரயோகம்) தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.

(i) 1919 (ii) 1929 (iii) 1231 (iv) 119

21) பொதி செய்யப்பட்ட பொருளொன்றின் மேலுறையில் காணப்படும் இக்குறியீட்டுக்குரிய பெயர் யாது?

32 18 39 71 995

(i) குறியீட்டுக்கோடு
(ii) ரேகைக்கோடு
(iii) காந்தக்கோடு
(iv) அச்சுக்கோடு

22) வளவகங்கை ஆறு உற்பத்தியாகி கலக்கும் இடம் எதுவெனக் கண்டு கீறிடுக.



(i) சிவனொளி பாதமலை, அம்பாந்தோட்டை
(ii) சிவனொளி பாதமலை, கொழும்பு
(iii) சிவனொளி பாதமலை, திருகோணமலை
(iv) நமுனு குலகந்த, மொன்றாகலை

23) 

உருவில் உள்ள உடுக் கோலத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?

(i) இரட்டையன் (ii) ஓராயன்
(iii) தேள் (iv) பெருநாய்

24) புதிய நாணயத்தின் பண்புகளில் வெளிச்சத்தினூடாக பார்க்கும் போது அது உண்மையானதா பொய்யானதாக என இனம் காட்டும் படம் எது?

(i) 
(ii) 
(iii) 
(iv) 

25) தனது உடல் நிறையின் $\frac{2}{3}$ பங்கு நிறையை முட்டையாக இடும் பறவை எது?

(i) அன்னம் (ii) கிவி (iii) காட்டுக்கோழி (iv) கோழி

# இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியின் இயல் இசை நாடகவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடாத்தும் இயல் இசை நாடகவிழா இன்று முதல் 17 ஆம் திகதி வரை பிற்பகல் 4 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் முதல்நாள் நிகழ்வாக இன்று செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கலந்துகொள்ளவுள்ளரர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை சின்மயமிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் வழங்கவுள்ளார்.தொடர்ந்து நாச்சிமார் கோவிலடி இராஜேஸ்வரி குழுவினர் வழங்கும் சைவ வித்தியா விருத்திச்சங்கச் சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனமும் மங்கல இசையும் இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து யோகர் சுவாமி நற்சிந்தனை இசைப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதல் பரிசு பெற்ற இசை அரங்கம், நா.மதியழகன் குழுவினர் வழங்கும் இசையும் மனிதனும் வில்லிசை, ஏழிசை மிருதங்கம் நத்தனாலய மாணவிகள் வழங்கும் நாட்டியஅர்ப்பணம் கலைஞர் கௌரவிப்பு, நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் பூதத்தம்பி இசைநாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

நாளை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னை நாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து நாச்சிமார் கோவிலடி சபேசன் குழுவினர் வழங்கும் மங்கல இசை, ஆசியுரையை அகில இலங்கை ஜம்பியதுல் உலமா தலைவர் மௌலவி அப்துல் அசீஸ் வாழ்த்துரை களை வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து சைவச்சிறுவர் இல்ல மாணவர்கள் வழங்கும் காவடி நக்கீரன் குழுவினர் வழங்கும் வேணுகான இசை, புஷ்பாலய நடனசபா மாணவிகள் வழங்கும் அபிநய சதங்கை, பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்துவம் சாதகமானதா? பாதகமானதா? என்ற பொருளில் சிறப்புப்பட்டிமன்றம் பேராசிரியர் ரி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு பாசையூர் சென் அன்ரனிஸ் கலைக்கழகம் வழங்கும் வீரபாண்டிய கட்டப்பொம்மன் தென்மோடி நாட்டுக்கூத்து என்பன இடம்பெறவுள்ளது.

15 ஆம் திகதி வியாழக் கிழமை 3 ஆம் நாள் நிகழ்வுகள் பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாக வுள்ளதுடன் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.க.கணபதிப்பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் நாச்சிமார் கோவிலடி பிரபாகுழுவினர் வழங்கும் மங்கல இசை ஆசியுரையை வணகலைமாமணி மீகஷஜந்துரே சிறி விமலதேரர் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து சைவச்சிறுவர் இல்ல மாணவ மாணவிகள் வழங்கும் யோகக்கலை, பரத கலாகேந்திர மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி, லி.அனிருத்தரனின் மாணவர்கள் வழங்கும் கிண்கிணிநாதம் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினர் வழங்கும் மயான காண்டம் (இசை நாடகம்) என்பன இடம்பெறவுள்ளன.

16 ஆம் திகதி நடைபெறும் நான்காம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கலாசாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. உஷா சுபலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து நாச்சிமார் கோவிலடி சுமர் குழுவினர் வழங்கும் மங்கல இசை ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர், வாழ்த்துரையை குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சைவச்சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் தெலுங்கு நடனம் சாரங்கம் இசை மன்றம் வழங்கும் மதுரகானம், சாகித்திய வீணாலய திருமதி.விதுஷா கோபிகிருஷ்ணாவின் மாணவிகள் வழங்கும் விரலிசை, உரும்பிராய் கலைக் கோவில் மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி, தொடர்ந்து கலைஞர்கள கௌரவிப்பு நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் காத்தவராயன் கூத்து என்பன இடம் பெறும்.

17 ஆம் திகதி ஜந்தாம் நாள் நிக்ழ்வுகள் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார்.

ஈழநல்லூர் பி.எஸ்.பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும் மங்கல இசை, ஆசியுரையை நாவாந்துறை பங்குத் தந்தை வணபிதா பா.பி.இராசலிங்கம் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து சைவச்சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் கூடிவிளையாடு பாப்பா நாத சமர்ப்பணம், கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கும் நர்த்தன நிவேதனம், கலைஞர் கௌரவிப்பு திருமறைக்கலா மன்றம் வழங்கும் குவேனி தென்மோடி நாட்டுக்கூத்து என்பன இடம்பெறவுள்ளன.

* * *





இலங்கை பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் வி.சிவகுமாரன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதிநிதிகள் இருவர் உரையாற்றுவதையும் காணலாம். (01)

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியாக சிதம்பரநாதன்

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் மூன்றாவது பீடாதிபதியாக இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை 2:I ஐ சேர்ந்த கு. சிதம்பரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று முறிப்பு பனங்காமத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆரம்ப கல்வியை. யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் இடை நிலை கல்வியை ஓமந்தை மத்திய கல்லூரியிலும் உயர் கல்வியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார். 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் விஞ்ஞான பட்டதாரியான இவர் 1982 இல் முல்லை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியரானார்.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தை பெற்ற இவர் 23.9.1993 வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

1999 இல் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முதுமாணி பட்டம் பெற்ற இவர் 2001 ஆம் ஆண்டு மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான கல்வியில் கல்வி முதுமாணி பட்டம் பெற்றார். 2002 இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரை இணைப்பாளராக பதவியுயர்வு பெற்ற இவர் 2004 ஆம் ஆண்டு கல்வியும் தர மேம்பாடும் உப பீடாதிபதியானார்.

2008 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டபின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் கொழும்பு மனித உரிமைகள் நிலையத்தில் மனித உரிமைகள் டிப்ளோமாவையும் பெற்றார்.

## பொதுக்கூட்டம்

வரலாற்று பிரசித்தி பொலி கண்டி அருள்மிகு கந்தவனக் கடலை கல்யாணவேலவர் ஆலய 2ஆம் திருவிழா சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத்தெரிவும் எதிர்வரும் நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கந்தவன ஆலய முன் மண்டபத்தில் தலை வர் சி.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொளளுமாறு சபைச்செயலாளர் வீ.சிவஞானசேகரம் அறிவித்துள்ளார்.(116)

## கரவெட்டி வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

சம்பத் வங்கியின் நெல்லியடிக் கிளையினால் கரவெட்டி வைத்தியசாலைக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இந்த உபகரணங்களில் வெளிநோயாளர் பிரிவிற்கு வரும் தாய்மார்கள், பாலூட்டுவதற்கு வசதியான பாலூட்டும் அறை உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

தொடர்ந்து வைத்தியசாலை வளாகத்தில் மரங்களும் நடுகை செய்யப்பட்டன. இந்நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார வைத்தியதிகாரி ஆர்.கேதீஸ்வரன், சம்பத் வங்கி முகாமையாளர், ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மன்னார் யாழ்ப்பாண இலக்கிய படைப்பாளிகள், கலைஞர் இடையேயான ஒன்றுகூடலும் கலந்துரையாடலும் நாளை முற்பகல் 10 மணிக்கு டேவிற் வீதி யாழ்ப்பாணம் .எனும் முகவரியில அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற, கலைத்தூாது அழகியல் கல்லூரியில் எழுத்தாளர் சட்டநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மன்னார் தமிழ் இலக்கியம் பற்றி தமிழ்நேசன் அடிகள், மன்னார் நாட்டுக்கூத்துக்கள் பற்றி எஸ் ஏ உதயன், யாழ்ப்பாண இலக்கியம பற்றி சி.ரமேஸ், அண்மைக்கால யாழ்ப்பாண இலக்கிய செயற்பாடுகள் பற்றி வேலணையூர் தாஸ். ஆகியோரின் உரைகள் இடம் பெறவுள்ளன.

## நல்லூர் ஆலய மஹோற்சவம் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடல்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் குறித்த முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான முதலாவது கலந்துரையாடல் எதர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நல்லூர் கந்தசுவாமி நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ................................................

முகவரி :- ................................................

பிறந்த ஆண்டு :- ................................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

................................

பெற்றோர் கையொப்பம்

# சட்டவிரோதமாக சென்ற படகு லிபியா கடற்பரப்பில் விபத்து

## 41 பேர் பலி 57பேர் காயம்



லிபியா கடற்பகுதி வழியாக ஐரோப்பாவிற்கு சட்ட விரோதமாக பயணித்துக் கொண்டிருந்த படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 57 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

லிபியாவின் தலைநகர் திரிபோலியிலிருந்து 37 மைல் கிழக்கே உள்ள ரமி கால் என்ற பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகத் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

லிபியாவின் பாதுகாப்பற்ற கடல் எல்லைகளும், மத்தியதரைக் கடலைத் தாண்டி இத்தாலி, மால்டா போன்ற நாடுகளை எளிதில் அணுகும் வண்ணம் அமைந்துள்ள அந்நாட்டின் நிலப்பரப்பும் ஐரோப்பாவை அடைய முயற்சி செய்யும் வடக்கு ஆபிரிக்க மக்களுக்கு லிபியாவை பொது வழித்தடமாக மாற்றியுள்ளது.


இந்தப் பயணத்திற்காக அவர்கள் ஒவ்வொருவரும் தலா 1000 டொலருக்கு மேல் சட்ட விரோத குழுக்களிடம் பணம் செலுத்துவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

. ஆயுதாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள லிபியா தனது நாட்டின் பாதுகாப்புத்துறையை வலுப்படுத்த உலக நாடுகளின் உதவியை எதிர்நோக்கியுள்ளது.

இதனைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சட்ட விரோத குழுக்கள் ஐரோப்பாவிற்கு குடியேற விரும்பும் மக்களை முறையற்ற வழியில் அனுப்ப இந்தத் தடத்தைப் பயன்படுத்துகின்றன.

கடந்த மார்ச் மாதம் இவ்வாறு மத்தியதரைக் கடல் பகுதியில் வந்து ஆபத்தில் சிக்கிய 4000 அகதிகளை நான்கு நாட்களில் சிசிலியின் தெற்குப் பகுதியில் இத்தாலிய அரசு காப்பாற்றியுள்ளது இங்கு குறிப்பிடப்படுகின்றது.

# கைகள் கோர்த்தபடி பிறந்தன இரட்டைக் குழந்தைகள்



அமெரிக்காவில் தாயின் கர்ப்பப்பையில் இருந்து இரடடைக் குழந்தைகள் கைகளை கோர்த்தபடி பிறந்துள்ளனர்.

அமெரிக்காவை சேர்ந்த தம்பதிகள் பில் போத் (35) மற்றும் சாரா டிஸ்டில்தவெயிட் (32). இவர்களுக்கு அன்னையர் தினத்தன்று இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தன. அதிசயம் என்னவென்றால் இரண்டு குழந்தைகளும் தங்களது கைகளை கோர்த்தபடி பிறந்துள்ளது.

குழந்தைகளுக்கு ஜில்லியன் மற்றும் ஜின்னா என பெயரிட்டு உள்ளனர்.இது குறித்து சாரா கூறும் போது, இது அன்னையர் தினத்தில் எனக்கு கிடைத்த நல்ல பரிசுப்பொருள் . நான் இதை நம்பவில்லை. மேலும், இது அதிசயமானது இருவரும் கைகோர்த்தபடி பிறந்துள்ளனர் என்றும் இருவரும் நல்ல நண்பர்களாக இருப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

## உலகச் செய்திகள்

# மடிக்கணனியை திருமணம் செய்ய அடம்பிடிக்கும் விநோத நபர்



மடிக்கணனியை திருமணம் செய்ய அனுமதி கேட்டு நபர் ஒருவர் நீதிமன்றத்தை நாடியுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


அமெரிக்காவில் உடா மாகாணத்தைச் சேர்ந்தவர் கிறிஸ் செவிர். வழக்கறிஞரான இவர், இசையமைப்பாளரும் ஆவார்.

அதேசமயத்தில், ஆபாசப் படங்களுக்கு அடிமையான இவர், தனது 'அப்பிள்' மடிக்கணனியில் நிறைய ஆபாசப் படங்களை வைத்துள்ளார்.

இந்நிலைய்யில், உடாவில், ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதைப் பார்த்த அவர், ஆபாசப்படம் நிறைந்த தனது மடிக்கணனியை திருமணம் செய்து கொள்வதற்காக, திருமண உரிமம் கோரி, சமபந்தப்பட்ட துறையை அணுகியுள்ளார்.

ஆனால், அவரது கோரிக்கையை அத்துறை நிராகரித்தது. இருப்பினும் அவர் விடவில்லை. தனது மடிக்கணனியைத் திருமணம் செய்ய அனுமதி கேட்டு, நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதை விசாரிதத நீதிபதி ரொபர்ட் ஹிங்கிள், மனு கேலிக்கூத்தாக இருப்பதாகக் கூறி நிராகரித்துள்ளார்.

# ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு ஆணைக்குழு் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது உள்ளிட்ட பலவேறு சீர்திருதத நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று ஜி4 அமைப்பைச் சேர்ந்த நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பான அறிக்கையை ஐ.நா.வுக்கான ஜெர்மனி தூதர் ஹெரால்ட் பிரான் வெளியிட்டார்.

ஜி4 அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள பிரேஸில், ஜேர்மனி, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது, பாதுகாப்பு ஆணைக்குழு வீடோ அதிகாரமிக்க நிரந்தர உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்ற சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். சீர்திருத்தம் செய்வதில் தேவையற்ற தாமதத்தை செய்வது ஐ.நா. சபையை தற்போதைய காலத்திற்கு பொருத்தமற்றதாக ஆக்கிவிடும். பாதுகாப்பு ஆணைக்குழு கொண்டு வரப்படும் தீர்மானங்களை வீடோ அதிகாரத்தைப் பெற்றுள்ள 5 நாடுகளில் ஏதேனும் ஒன்று நிராகரித்தால் கூட தீர்மானத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை தற்போது உள்ளது. இந்த 'வீடோ' அதிகாரம் தொடர்பாக ஐ.நா. சபை உறுப்பினர்கள் இடையே அதிருப்தி நிலவுகிறது. அனைத்துப் பிராந்தியத்திற்கும் பிரதிநித்துவம் அளிக்கும் வகையில வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்களை உறுப்பினர்களாக்க வேண்டும் இந்த அறிக்கை தொடர்பாக ஐ.நா.வுக்கான பாகிஸ்தான் தூதர் மசூத்கான் கூறுகையில, குறைந்த எண்ணிககையிலான உறுப்பினர்களைக் கொணட இந்த ஜி4 அமைப்பைச் சேர்ந்த நாடுகள், உலகின் பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள்போல பேசி வருகின்றன. தங்களின் தேச நலனை முன்னிட்டே ஐ.நாவில் சீர்திருத்தத்தை ஜி4 நாடுகள் கோரி வருகின்றன. அவர்களின் விருப்பம் எப்போதும் நிறைவேறாது என்றார்.

# புதிய எம்.பி.க்களை வரவேற்க தயாராகிவரும் டில்லி

(புதுடில்லி)

16 ஆவது நாடாளுமன்ற தேர்தல் 9 கட்டமாக நடத்த முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே 8 கட்ட வாக்குப்பதிவு முடிந்துவிடடது. 9 ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குபதிவு நேற்று நடந்தது. யார் யார் எம்.பியாக தேர்ந்தெடுக்கப்படுவார், எந்தக் கட்சி ஆட்சி அமைக்கும் என்பது வருகிற 16 ஆம் திகதி தெரியும்.

அன்று தான் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. புதிய எம்.பி.க்களை வரவேற்க நாடாளுமனறத்தின் செயலகம் அனைதது ஏற்பாடுகளையும் தொடங்கி விடடது. ஒவ்வொரு எம்.பி.க்கும் நாடாளுமன்ற விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக புத்தகம் வழங்கப்படும். இந்த புத்தகத்தை அச்சிடும் பணி தற்போது நடந்து வருகிறது.

மேலும் விமானநிலைய்யம், ரயில் நிலையம் உட்பட பல்வேறு தகவல்களுடன் கூடிய புத்தகம் ஒன்றும் புதிய எம்.பி.க்களுக்கு வழங்க தயார் செய்யபபட்டுள்ளது.

புதிய எம்.பி.க்கள் தங்குவதற்கான இடங்கள், போக்குவரதது வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. விருந்தினர் மாளிகை மற்றும் அசோகா ஹோட்டலில் புதிய எம்.பி.க்கள் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது. எம்.பி. பதவியை விட்டு செல்பவர்கள், புதிய எம்பி.க்களுக்காக அரசு பங்களாவை காலி செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

புதிய எம்.பி.க்கள் தங்களை பற்றி தகவல்களை கொடுக்க 18 முதல் 20 விண்ணப்பங்களை நிரப்பவேண்டும். தனிப்பட்ட தகவல்கள், மருத்துவ வசதி, அடையாள அட்டை உட்பட பல்வேறு தகவலகளை தெரிவிக்க வேண்டும்.

புதிய எம்.பி.க்களுக்கு அடையாள அட்டை எடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் உள்ள 62 இலக்க அறையில் அன்றைய தற்காலிக போட்டோ ஸ்டுடியோவும் அமைக்கப்பட்டுள்ளது 16 ஆவது மக்களவை மே 31 ஆம் திகதி முனபு செயற்பட தொடஙகும் அன்று தான் 15 ஆவது மக்களவையின் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடைகிறது.

தற்காலிக சபாநாயகருக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி மாளிகையில் பதவிப்பிரமானம் செய்து வைப்பார். புதிய சபாநாயகர், புதிய எம்.பி.க்களுக்கு பதவப் பிரமாணம் செய்து வைப்பார். ஜூன 2 ஆம் திகதி புதிய சபாநாயகர் தேர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் முடிவின் பின்பே அரசியல் தெளிவாகும்

## தேவ கவுடா தெரிவிப்பு

(கோலார்)

லோக்சபாத் தேர்தல் முடிவுக்குப் பிறகே நாட்டின் அரசியல் போக்கு தெளிவாகும் என்று மாஜி பிரதமரும், மதச்சார்பற்ற ஜனதாதள தேசியத் தலைவருமான தேவகவுடா தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டம், பெல்லூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில், லோக்சபாத் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகே நாட்டின் அரசியல் போககு தெளிவாகும். மத்தியில் புதிதாக அமையும் அரசில் என்னுடைய பங்கு என்ன என்பதும் தேர்தல் முடிவுக்குப் பிறகே தெரிய வரும் என்றார்.

## இலங்கையின்...

இடதுசாரிக் கட்சிகளின் இந்தப் போக்கு காரணமாக ஒட்டு மொத்தமாக இலங்கையின் முற்போக்குப் பயணத்துக்கு நன்மை பயத்தாலும், அவற்றின் சோசலிச இலக்கு இழக்கப்பட்டு தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடம் தலைமை ஒப்படைக்கப்பட்டு, அவற்றின் வாலாக அவை மாறியுள்ளன. இந்த நிலைமை நீடிக்கும் வரை இலங்கையில் சோசலிச இலட்சியம் என்பது வெறும் கனவாகவே இருக்கும்.

எது எப்படியிருந்த போதிலும், இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியம் என்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளால் அரை நூற்றாண்டுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அமெரிக்காவும் இதர மேற்குலக சக்திகளும் இலங்கையில் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதி யுத்த நிலைமைகளைச் சாக்காக வைத்து இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் காட்டிக் கொண்டாலும், இலங்கைக்கும் அவற்றுக்குமான உறவுச் சீர்குலைவு எப்பொழுதோ ஏற்பட்ட ஒன்றாகும். அதன் அடிப்படை அன்றும் இன்றும் இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பது சம்பந்தமானது.

(நன்றி: வானவில் 39)

# நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸிற்கு புகழாரம்



(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் பாரிய அர்ப்பணிப்புடனும், அக்கறையுடனும் செயற்பட்டு வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமேல் மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளின் அபிவிருத்தியிலும் அக்கறையுடனும் முனைப்புடனும் செயற்பட்டு வருகின்றார் என சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின கீழ் சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு குருநாகலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே சிரேஷ்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சிறுகைத் தொழில்துறையை நாடளாவிய ரீதியில் ஊக்குவித்து வளர்த்தெடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கது.

ஏற்கனவே இந்த அமைச்சின் அமைச்சராக நான் பணியாற்றியுள்ளதால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்தவகையில், எமது மாகாணத்திற்கு வந்திருக்கும் அவரை கௌரவிக்கும் முகமாக இந்நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு நாமும் சக அமைச்சர்களும் பெருமைப்படுகின்றோம் எனத் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் குருநாகலை மாவட்டத்தில் இதுவரையில் 650 தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 250 பேருக்கு ஏற்கனவே தொழில் உபகரணங்களும் மூலப்பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இன்றைய தினம் 91 பேருக்கு தொழில் உபகரணங்களும் மூலப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந் நிகழ்வில் நுகர்வோர் விவகார சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி. நாவின்ன, பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் பிரதியமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, குருநாகலை மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.பி. சேகரா உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இந்தியக் கடற்பரப்பில் 5 இலங்கை மீனவர் கைது

(சென்னை)

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மேலும் ஐந்து இலங்கை மீனவர்கள் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காக்கினாடா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து ஒரு மீன்பிடிப் படகும் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டதாக இந்தியக் கடலோரக் காவல் படை உதவிப் பொறுப்பாளர் ஜெகநாத ராவ் தெரிவித்தார்.

இந்திய் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 31 இலங்கை மீனவர்கள் 6 படகுகளுடன் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நேற்று கொழும்பில் நடைபெற்ற நிலையில் இந்த மீனவர்கள் கைது இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க மத்தியஸ்தம் அரசின் முட்டாள்தனமான செயல்

## ஜாதிக ஹெல உறுமய போர்க்கொடி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்காக தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டமையானது அரசாங்கத்தின் மற்றுமொரு முட்டாள்தனமான செயலெனப் போர்க்கொடி தூக்கியுள்ளது ஜாதிக ஹெல உறுமய.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசு ஆகிய இரண்டு தரப்பிற்குமிடையில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் முகமாக தென்னாபிரிக்காவின் விசேட பிரதிநிதி சிறில் ரமபோஸா விரைவில் இலங்கை வரவுள்ளார். இந்த சிறில் ரமபோஸா விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர். எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது ஏற்புடையதல்ல.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு முறையை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதும் ஏற்புடையதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின்...

முக்கியமான விடயங்களாக வடக்கில் இருந்து இராணுவத்தைக் குறைக்க வேண்டும். தனியார் காணிகளை பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டும். மீள் குடியேற்றத்தினை மேற்கொள்ள வேண்டும். வடமாகாண சபைக்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படல் வேண்டும் ஆகியவை உள்ளடங்கலாக பல விடயங்கள் அமைந்துள்ளன. இவ்விடயங்களினால் வடமாகாண தமிழ் மக்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் அரசாங்கம் தீர்வினை எய்துவதற்கான எந்தவொரு பேச்சுவார்த்தையினையும் எம்முடன் மேற்கொள்ள விரும்பவில்லை. இது தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே, இவை தொடர்பில் யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளாக அரசாங்கம் எந்தவித முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளாது இப்போது சர்வதேச விசாரணையைத் தவிர ஏனைய அனைத்தையும் மேற்கொள்ள முடியும் என்று ஜப்பான் அமைச்சரிடம் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கம் ஐ.நா. பரிந்துரைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு எதிராகவே அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்தது. வடக்கில் காணி அபகரிப்பு, இராணுவ குவிப்பு, பெண்கள் மீதான அடக்கு முறைகள் மற்றும் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினாலும் இன்னமும் அடக்கு முறைக்குள்ளேயே வைத்திருப்பது போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. எனவே, சர்வதேசத்திடம் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து காலத்தைக் கடத்தியது போதும். இப்போதும் அனைத்தையும் செய்வோம் எனக்கூறி கதைத்துக் கொண்டிருக்காமல் செயலில் காட்ட வேண்டும். ஜனாதிபதி ஜப்பானிய அமைச்சரிடம் குறிப்பிட்டது அனைத்தும் உண்மையெனின் இம்மாத இறுதிக்குள் அனைத்தையும் செயற்படுத்திக் காட்ட வேண்டும்.

மேலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 70 வீதமானவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆணைக்குழுவின் செயலணிக் குழுத்தலைவர் லலித் வீரதுங்கவே இதனைக் குறிப்பிட்டு வருகின்றார். ஆனால், உண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 20 வீதமேனும் செயலாக்கப்படவில்லை. இன்றும் வடக்கில் அனைத்து செயற்பாடுகளிலும் கட்டுப்பாடுகளே விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவுடன் பகிரங்க விவாதத்தை நடத்த நான் தயாராகவே உள்ளேன். ஆதாரமிருப்பின் செயற்படுத்திய திட்டங்களை லலித் வீரதுங்க காண்பிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## கட்டுத்துவக்கு...

சுண்டிக்குளம் குகேனி பயிற்சி முகாமைச் சேர்ந்த டபிள்யு.ஜி. எஸ்.தர்ஷன (வயது-25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த இராணுவ வீரர் சுண்டிக்குளம் பகுதியிலுள்ள காட்டுப் பகுதிக்குள் நேற்று முன்தினம் இரவு சென்றவேளை அங்கு பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்துள்ளது. இதன் போது படுகாயமடைந்த அவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் நேற்றைய தினம் அவர் கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (25)

## குருநகர்...

கையில், நான் பெரியகோயிலினுடைய பாதிரியாராக கடந்த 2 வருடங்களாக உள்ளேன். அங்கே மறைக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது. சுமார் 500 மாணவர்களும் 30 தொடக்கம் 35 வரையான ஆசிரியர்களும் உள்ளனர்.

அதன்படி மறைக்கல்வி ஆசிரியர்களுள் ஒருவராகக் கடந்த நவம்பர் மாதம் முதல் கொன்சலிற்றா இருந்தார். கடந்த ஒன்றரை மாதங்களாக கொன்சலிற்றா சமுகம் தரவில்லை.

எனினும் ஆசிரியர்களாக பலர் வருவார்கள், போவார்கள் அதனால் அவர் சமுகம் தராதமை குறித்து நான் தேடவில்லை. அதுபற்றி எனக்குத் தெரியாது. சக ஆசிரியர்களே அவரின் வீட்டிற்குச் சென்று விசாரித்தனர்.

மறைக்கல்வி தொடர்பான விடயங்களைத் தெரிவிப்பதற்கு சிலவேளைகளில் தொலை பேசியில் அழைப்பு எடுத்துள் ளேன். அத்துடன் தேவை கருதியும் குறுந்தகவல்களை அனுப்பியுள்ளேன். எனினும், கொன்சலிற்றா இறப்பதற்கு முன் ஒன்றரை மாதங்களாக தொடர்பு கொள்ளவில்லை.

இருப்பினும் கொன்சலிற்றா கிணற்றுக்குள் இறந்த நிலையில் இருந்தமை தொடர்பில் கடந்த 15ஆம் திகதி 3.00 மணிக்கு மக்கள் கூறியே தெரியும். எனினும் மறையாசிரியர் என்பதைத் தவிர எனக்கும் கொன்சலிற்றாவுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. அத்துடன் சாதாரண தொடர்பை வைத்துக்கொண்டு கொன்ச லிற்றாவின் பெற்றோரும், ஊடகங்களுமே பெரிதாக்கியுள்ளன. இவர்கள் கூறுமளவிற்கு எந்தவிதமான விடயமும் இல்லை என்றார். (25,பா)

## இணக்கப்பாடின்றி...

நம்பியார் நகர் சித்ரவேல், கீச்சாங்குப்பம் சிவஞானம் ஜெகதாப்பட்டின விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர் குட்டியாண்டி, முன்னாள் தலைவர் ராமகிருஷ்ணன், காரைக்கால் வீரதாசன் காரைக்கால்மேடு அகிலன், வேல்மயில், காசாகுடிமேடு செல்வமணி மற்றும் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவ பிரதிநிதிகள் தேவதாஸ், ஜேசுராஜ், அருள் ராயப்பன் அருளானந்தம் உட்பட 17 பேரும் தமிழக அரசு சார்பில் மீன் வளத்துறைச் செயலர் விஜயகுமார், இயக்குநர் முனியநாதன், கூடுதல் இயக்குநர் ரங்கராஜீ, இந்திய அரசு சார்பில் வெளியுறவுத்துறை இணைச் செயலர் சு.சித்ராதுரை, துணைச் செயலர் மயங்க ஜோஷி ஆகியோர் கொழும்பிற்கு வருகை தந்தனர்.

இலங்கை மீனவர்கள் தரப்பில் வடக்கு மாகாணத்தைச் உள்ளடக்கிய வகையில் 20 பேர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தைக்கு இலங்கை சார்பில் மீன்வளத்துறைப் பணிப்பாளர் நிமால் ஹெட்டியாராச்சி தலைமை வகித்தார்.

இதன்படி கரித்தாஸ் இலங்கை செடெக் நிறுவனத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பேச்சுக்கள் ஆரம்பமானபோதிலும் இலங்கை கடற்பரப்பில் தொடர்ந்து மீன் பிடிக்க அனுமதிக்குமாறும், ஆழ்கடலில் மீன்பிடிக்க சில வாரங்க ளுக்கேனும் அனுமதிக்க வேண்டுமெனவும் இந்திய மீனவர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் இந்திய மீனவர்களின் கோரிக்கைக்கு அனுமதியளிப்பதன் மூலம் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுமெனவும், எனவே இதற்கு அனுமதியளிக்க முடியாதென வடபகுதி மீனவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் இரு தரப்பினருக்குமிடையிலான பேச்சுவார் த்தை எவ்வித இணக்கப்பாடுமின்றி நிறைவடைந்தது.

நேற்றைய பேச்சு இணக்கப்பாடின்றி முடிவடைந்த நிலையில் மூன்றாம் கட்டப் பேச்சு எங்கு, எப்போது நடைபெறும் என தீர்மானிக்கப்படவில்லையென இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசனைச் சபை உறுப்பினர்களில் ஒருவரான எஸ்.பி.அந்தோனிமுத்து தெரிவித்துள்ளார்.

## இந்தியா....

விஜயம் செய்த இந்தியாவின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான இணைப்புச் செயலாளர் திருமதி சுஜித்திரா துரைசுவாமி அம்மையார் என்னிடம் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது அம்மையார் என்னை இந்தியா வருமாறு அழைப்பு விட்டதாக நினைவுக்கெட்டிய வரை எனக்கு ஞாபகமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மனித...

அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கௌதம புத்த பிரான் சமாதானத்தையே வலியுறுத்தினார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தரின் வழிகாட்டல்கள் அரசாங்கங்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழிகாட்டலாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

சுயலாப நோக்கங்களின் அடிப்படையில் செயற்படுவோரை மக்கள் நிராகரிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சட்ட உதவிகள்...

றம் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களைச் சார்ந்த பிரதிநிதிகளும், இலங்கையின் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சின் பிரதி நிதிகளும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றுள்ளனர்.

## பாப்பரசர்...

டுள்ளார். இதேவேளை, கொழும்பில் மிகப்பெரிய பிரார்த்தனைக் கூட்டமொன்றும் இடம்பெறவுள்ளது என இவரது விஜயம் தொடர்பில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கத்தோலிக்க இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

# மீண்டுமொரு யுத்த நிலைமை ஏற்பட இடமளிக்கக்கூடாது

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

நாட்டில் மீண்டுமொரு யுத்த நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாதென வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற யுத்த வெற்றி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

யுத்தத்தினால் பொருளாதார சேதம் ஏற்பட்டது. உயிரிழப்புக்கள் நேர்ந்தன. உடைமைகள் நாசமாகின. அதற்கும் மேலாக பலரும் மனவேதனைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எமது தாய்நாட்டில் அத்தகையதொரு நிலைமை மீண்டும் உருவாகுவதற்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது.

எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கைக்காகவும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலையெடுக்கக் கூடாது என்பதே ஜனாதிபதியினதும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினதும் விருப்பமாகும்.

எமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு நாங்கள் இந்த நாட்டில் எங்கும் சென்று வரக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் விநியோகம்; அவதானமாக இருக்க வேண்டும்

## பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு

பாடசாலைகளுக்கு அருகாமையில் போதைப்பொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பாக அவதானமாக இருக்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று பிற்பகல் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனுக்கு இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கு அருகாமையில் போதைவஸ்து விநியோகம், கப்பம் கோருதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து பல முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தை அமுல்படுத்தும் போது, சந்தேக நபர்களின் அந்தஸ்து அல்லது தரம் குறித்து கவனம் செலுத்தக்கூடாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

# ஆசிரியையை முழந்தாளிட வைத்தவருக்கு

## ஒத்திவைத்த 2 வருட கடூழிய சிறை



(கொழும்பு)

நவகத்தேகம தேசிய பாடசாலையில் ஒழுக்கத்திற்கு பொறுப்பான துசிதா ஹேரத் என்ற ஆசிரியையை முழந்தாளிட வைத்த வடமேல் மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத் குமாரவிற்கு ஏழு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டுவருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை நேற்று விதிக்கப்பட்டது.

புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்ணன்டோவே இவ்வாறு தண்டனை விதித்துள்ளார்.

சந்தேக நபரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி, பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு மூன்று இலட்சம் ரூபா நட்டஈடு செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பற்ற நிலையில் இலங்கையில் பெண்கள்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பெண்கள் பேருந்துகளில் செல்லவும் வீடுகளில் தனிமையில் இருக்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நலத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்களுக்கு எதிராக இவ்வாறான வன்கொடுமைகளில் ஈடுபடும் நபர்கள் உண்ணும் உணவில் விஷம் உள்ளதா தெரியவில்லை.

முன்னைய காலங்களில் வீடுகளில் ஏற்படும் பிரச்சினைகள் வெளியில் தெரிவதில்லை. அவை வீடுகளிலேயே தீர்க்கப்பட்டன. அந்த நிலைமை தற்போதில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முழு உலகத்திற்கும் தெரியவருகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் வல்லுறவுச் சம்பங்கள் தொடர்பான செய்திகளை அண்மைக் காலமாக ஊடகங்களில் வெளிவருவதை காணமுகிறது.

உலகில் பல நாடுகளில் இப்படியான பல சம்பவங்கள் நடக்கின்றன. பெண்களிலும் இப்படியானவர்கள் இருக்கின்றனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# இறக்குமதிக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

எதிர்காலத்தில் பெரிய வெங்காயம், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றுக்கான இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் உள்ளூரில் மேற்படி உற்பத்திகளை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனேயே இவற்றுக்கான இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படுவதாகவும், எனினும் ஏனைய பிரதேசங்களில் பரிசோதனை முயற்சியாக இவை செய்கை பண்ணப்படுவதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# நீதிமன்றத் தீர்ப்பு குறித்து மருத்துவ சங்கம் ஆராய்வு

(கொழும்பு)

சிகரட் பக்கட்டில் 80 சதவீத எச்சரிக்கை அறிவித்தல், காட்சிப் படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பு குறித்து ஆராய்வதாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மருத்துவ சங்கத்தின் புகைத்தல் மற்றும் மதுசாரம் தொடர்பான குழுநிலை உறுப்பினர் வைத்திய கலாநிதி மனோஜ் பர்ணாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, சிகரட் பக்கட்டில் 80 சத வீதமான எச்சரிக்கை அறிவிதல் காட்சிப்படுத்தப்பட வேணடும் எனக் கோரியே சுகாதார அமைச்சு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியை கோரியிருந்தது.

எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பில் சிகரட் பக்கட்டில் 50 முதல் 60 சத வீத அறிவித்தல் காட்சிப் படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் உறுப்பினர் மனோஜ் பர்ணாண்டோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை தாம் முழுமையாக பரிசீலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் நலன் கருதி உயர் நீதிமன்றத்திற்கு செல்வதற்காக சட்ட ஆலோசகர்களுடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும் மனோஜ் பர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

# 7 ஆவது ஐ.பி.எல்.



ஹைதராபாத் சன்ரைசர்ஸ் 157/3
பின்ஞ் 68,
வோர்னர் 55 (ஆ.இ)
மலிங்க 2 விக்கெட்டுக்கள்



மும்பை இந்தியன்ஸ் 160/3 (18.4 ஓவர்கள்)
சிமன்ஸ் 68,
ராயுடு 68
புவனேஷ்வர் குமார் 2 விக்கெட்
ஹென்றிகியுஸ் 1 விக்கெட்

ஏழு விக்கெட்டுக்களால் மும்பை இந்தியன்ஸ் வெற்றி
ஆட்டநாயகன்: ராயுடு

# நகர சபை உறுப்பினர் சுட்டுக்கொலை



(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேலியகொட நகர சபை உறுப்பினர் ஷமில சந்தருவான் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் தளுகம பழைய கண்டி வீதியில் தனது வாகனத்தில் பயணித்து கொண்டிருந்த போது, இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நகர சபை உறுப்பினரின் சடலம் அவரது காரில் இருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

23 வயதான இந்த நகர சபை உறுப்பினர் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தீவிர ஆதரவாளர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 150 யானைக்குட்டிகள் சட்டவிரோதமாக பிடிப்பு

## அவற்றில் 80 உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த ஏழு வருடத்தில் இலங்கை காடுகளிலிருந்து 150 யானைக்குட்டிகள் சட்டவிரோதமான முறையில் பிடிக்கப்பட்டுள்ளதாக சூழலியல் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக வன உயிரியல் பாதுகாப்பு நிலையத்தைச் சேர்ந்த புபுது வீரரத்ன தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஏழு வருடத்தில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 150 யானைக்குட்டிகளில் உரிய பராமரிப்பின்றி 80 யானைக்குட்டிகள் உயிரிழந்துள்ளன.

யானைக்குட்டிகளின் சட்டவிரோத பிடித்தலின் பின்னணியில் அரசியல்வாதிகளின் பின்புலமே உள்ளது. எனினும் இந்த செயற்பாட்டை மேற்கொள்பவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் உரிய திணைக்களங்கள் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத ஆட்கடத்தல்; புலனாய்வுப் பிரிவு கண்டுபிடிப்பு

பாரியளவிலான சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

20 முதல் 30 இலட்ச ரூபா வரையில் அறவீடு செய்து நேபாளத்தின் ஊடாக ஐரோப்பிய, ஸ்கண்டினேவிய நாடுகளுக்கு நபர்களை சட்டவிரோதமாக அனுப்பி வைக்கும் வர்த்தகம் தொடர்பிலான தகவல்களை புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு பாரியளவில் பணத்தைச் செலுத்தி ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கு சென்று அரசியல் புகலிடம் பெற்றுக் கொண்டு நாடு திரும்பியவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயங்கள் அம்பலமாகியுள்ளன. இவ்வாறான சிலரை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

போரின் பின்னர் பலர் ஊடகவியலாளர்கள் என்ற அடிப்படையில் போலி ஆவணங்களுடன் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொண்டுள்ளதாக சிங்கள இணையத் தளமொன்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.